# ஜாமக்காரன்

WATCHMAN

*(ஜாமக்காரனில்) எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள். 1 தெச 5:21*

*ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான், ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி 2:15.*

✆ 0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com



**கர்த்தருக்குள் அன்பான ஜாமக்காரன் வாசகர்கள் யாவருக்கும் உயிருள்ள தேவனின் சமாதானம் பெருகுதாக.**

**மார்ச் மாதம் தேர்வு எழுதும் 10,11,12 பிள்ளைகளுக்காக ஜெபிக்க ஏராளமானவர்கள் கடிதம் எழுதினார்கள். பலருக்கு தொலைபேசி வழியாகவே ஜெபித்தேன்.**

**நம் பிள்ளைகள் அனைவரும் மே மாதம் விடுமுறை நாட்களில் ஆங்காங்கு நடைபெறும் விடுமுறை வேதாகம பள்ளிகளில்(VBS)சேர்த்து விடுங்கள். விடுமுறை நாட்களில் பிள்ளைகள் படிப்பதற்கென்று மிஷனரிகளின் வரலாற்று புத்தகங்களையும்,இரத்தசாட்சிகளின் வரலாறுகளையும் வாங்கி வாசிக்க சொல்லி பெற்றோர்கள் கட்டாயப்படுத்துங்கள். வீட்டிலுள்ள பெரியவர்கள் அல்லது பெற்றோர்கள் அவர்கள் வாசித்ததை திரும்பகூறச்சொல்லி நீங்கள் அவர்களிடம் கதைகேட்பதைப்போல் கேளுங்கள். அப்படி செய்தால் பிள்ளைகள் மனதில் படித்தது பதியவும்,அவர்கள் வளரும் போது அவர்களின் ஆவிக்குரிய ஜீவியத்துக்கு உதவியாகவும் இருக்கும். வாலிபப்பிள்ளை களுக்கென்று ஆவிக்குரிய கூட்டங்கள் ஆங்காங்கு நடைபெறுகிறது. அவைகளை விசாரித்து அறிந்து பிள்ளைகளை அக்கூட்டங்களுக்கு அனுப்பிவிட்டு பெற்றோர் கூட்டத்தில் கலந்துக் கொள்ளபோயிருக்கும் பிள்ளைகள் மனந்திரும்புதலின் அனுபம்பெறவேண்டும் என்று ஜெபியுங்கள்.**

**‘ 11ம்வகுப்பு படிப்பிலிருந்து-கல்லூரி படிப்புவரை வாலிபப்பிள்ளைகளின் சோதனைக் காலம் தொடங்குகிறது. ஆகவே மனம் திரும்பிய அனுபவத்தோடு 11ம் வகுப்பு அல்லது கல்லூரிக்கு பிள்ளைகள் சென்றால் எந்தசோதனையிலும் விழாமல் காக்கப்படுவார்கள். அவர்கள் தங்களை பாதுகாத்துக்கொள்ளமுடியும்.**

## நவீனகால வாலிபப் பிள்ளைகள்:

**பழைய காலம்போல் இப்போதுள்ள பிள்ளைகளை பெற்றோர் அடக்கிஆளவோ தங்கள் கட்டுப்பாட்டில் வைத்து வளர்த்தவோ முடிவதில்லை. பாவம் செய்ய பிள்ளைகள் வெளிஉலகில்**

ஏப்ரல் 2015

செல்லாமல் வீட்டிலேயே பாவ காரியங்களில் ஈடுபடமுடிகிறது. சரீர உறவுகொள்ளாமல் மனதளவில் பாவத்தை ரசித்து,ருசித்து தன்னைத்தானே பாவத்தை அனுபவிக்க பிசாசு வாலிபப்பிள்ளைகளுக்கு பல நவீன வழிகளை ஆயத்தப்படுத்தி வைத்திருக்கிறான்.

‘ மிக முக்கியமாக நவீனகருவிகளான **லேப்டாப், டேபளட், மொபைல், கம்பியூட்டர்** ஆகியவற்றின் வழியாக பாவம் செய்ய நவீன வழிகளை திட்டம் செய்து வைத்திருக்கிறான். அவைகளில் எதிலும் நம் பிள்ளைகள் அகப்படாமல் இருக்க, பாவத்தை சரீரதொடு உணர்ச்சியின்மூலமாக அல்லாமல் முதலில் **சிந்தனையில்** பிள்ளைகளை கறைப்படுத்தி அதன்பிறகு சரீரத்தை கறைப்படுத்த பிசாசு முயலுவான். பிசாசின் தந்திரங்களை நாம் அறிவோமே என்று வேதம் நமக்கு ஞாபகமூட்டுகிறது. அதாவது அவன் எப்படி எப்படியெல்லாம், எந்தெந்த ரூபத்தில் நம் பிள்ளைகளை கெடுக்க வருவான் என்பதை நாம் ஜெபித்து யோசித்து பிள்ளைகளை ஜாக்கிறதையாக வளர்த்துங்கள். நீங்கள் அவர்களை டிவியை பார்க்கவிடாமல் தடுத்தாலும் அமைதியுள்ள பிள்ளைகளைப்போல் வீட்டு அறைக்குள்ளேயே மொபைல் வழியாக எதை பார்க்கக்கூடாது என்று தடுத்தீர்களோ அத்தனையும் மொபைலில் பார்ப்பார்கள். இதற்கு பிள்ளைகளின் நண்பர்கள் பல விதத்தில் உதவுவார்கள். பார்க்காதே என்று தடுத்தால் அவர்கள் தங்கள் **கோபத்தை** நேரிடையாக உங்களிடம் காட்டாமல் அவர்களின் பல செயல்கள்மூலம் அவர்கள் கோப செயல்களை வெளிப்படும். அதை அறியும்போது மிகவும் நீங்கள் வேதனைப்படுவீர்கள்.

‘ ஆகவே **வாலிப பிராயத்தில் உன் சிருஷ்கரை நினை. பிர 12ல்** ஞானி எவ்வளவு அர்த்தத்துடன் எழுதியுள்ளான். வாலிபப் பருவத்திலேயே நம் பிள்ளைகள் மனந்திரும்புதலின் அனுபவத்தை பெற்றுவிட்டால் பெற்றோரின் பெரும்பாரம் குறையும். பிள்ளைகளைப்பற்றிய பயம் உங்களைவிட்டு நீங்கும். ஆகவே இந்த விடுமுறை நாட்களிலேயே பிள்ளைகள் மனம்திரும்பும் வழிகளை கண்டுபிடித்து ஏற்பாடு செய்யுங்கள்.

‘ வரும் நாட்கள் நம் வாலிபப்பிள்ளைகளுக்கு ஆபத்தான நாட்களாகும். வாலிப பிள்ளைகளுக்கு அதிவேக மோட்டார் சைக்கிள் வாங்கி தரவேண்டாம். நண்பர்களுடன் மோட்டார் சைக்கிளில் செல்ல அனுமதிக்கவும் வேண்டாம். வாகனவேகம் வாலிபர்களுக்கு இன்பம்-அதுவே அவர்கள் வாழ்க்கைக்கு பேராபத்தாக மாறும். பிள்ளைகள் பெற்றவர்கள் பெரும்பாலானோர் பிள்ளைகளின் கீழ்படியாத செயல்களைக்கண்டு கண்ணீர் வடித்துக்கொண்டிருக்கிறார்கள். ஒரு காலத்தில் பிள்ளைகள் வேண்டும் என்று கெஞ்சி ஜெபித்தவர்கள்- இப்போது ஏன் பெற்றோம் என்று நிம்மதியிழந்து தவிக்கிறார்கள்.

‘ குறிப்பாக வெளிநாடுகளில் வாழும் பெற்றோர், பள்ளி விடுதியில், கல்லூரி விடுதியில் படிக்கும் தங்கள் பிள்ளைகளைக்குறித்து அழாத நாளேயில்லை. பெற்றோரின் நேரடி பார்வையில் வளர்க்கப்படாத பிள்ளைகள் ஒருவேளை அவர்கள் பாவம் செய்யாமல்போனாலும் **கடவுளை மறந்து ஜீவிக்கும்**நிலை இப்போது உருவாகியுள்ளது.

‘ வீட்டில் பெற்றவர்கள் ஜெபத்தில் பிள்ளைகளுக்காக கண்ணீர்வடிக்கிறார்கள். அதே ஜெபவேளையில் அந்தவீட்டு பிள்ளைகள் ஜெபத்தில் கண்களைமூடாமல் சிரித்துக்கொண்டு ஒருவரோடொருவர் **தமாஷ்செய்து** விளையாடுகின்றனர். பிள்ளைகளுக்கு தேவபயம் இல்லை. ஜெபத்தில் தேவனோடு உறவாடுகிறோம் என்ற சிந்தையேயில்லாமல் பெற்றோரின் கட்டாயத்துக்காக கைகூப்பி வெறுமனே நிற்கிறார்கள். எவ்வளவு **ஆபத்தான நவீன** காலகட்டத்தில் வாழ்கிறோம்

என்று பார்த்தீர்களா?. இப்படிப்பட்ட பிள்ளைகளின் பிற்கால வாழ்க்கை என்னமாய் இருக்கபோகிறதோ தெரியவில்லை?.

' ஆகவேபெற்றோர்கள் முதலில் மனந்திரும்புதலின் அனுபவம் பெற்று பிள்ளைகளுக்காக ஜெபியுங்கள்.

' விடுமுறை காலங்களில் சபை விசுவாசிகள் மிஷனரிபணிதளங்களுக்கு சென்று வாருங்கள். அப்போது உங்களுக்கு ஆத்மபாரம் உண்டாகும். மிஷனரி பணிதளத்தின் தேவைகளை அவரவர்களின் சபைகளில் பகிர்ந்துகொள்ளுங்கள்.

' ஒருவேளை நீங்கள் பெந்தேகோஸ்தே சபை அங்கத்தினராக இருந்தால் உங்களுக்கு மிஷனரி பாரம் உண்டாக உங்கள் சபை உங்களை ஊக்குவிக்காது. உங்கள் சபை உபதேசம் அப்படிதான் இருக்கும். அதனால் சத்தம்போட்டு துதிக்க பெந்தேகோஸ்தே சபைக்கு போங்கள். ஆத்துமஆதாயம்,மிஷனரி பணி இவைகளுக்காக CSI போன்ற சபைகளிலுள்ள மனந்திரும்பின அனுபவம்உள்ள மிஷனரி ஜெபகுழுவினரோடு தொடர்பு வைத்துக்கொள்ளுங்கள். மிஷனரி ஊழியங்களில் நீங்கள் பங்குக்கொள்ள இந்த ஆலோசனை உதவும். பெந்தேகோஸ்தே சபையில் உள்ள ஜாமக்காரன் வாசகர்களுக்கு மட்டும் இந்த ஆலோசனை கூற பாரப்படுகிறேன்.

' உங்கள் பிள்ளைகள் எழுதிய தேர்வில் நல்ல மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெறவும், கர்த்தர் பிள்ளைகளை ஆசீர்வதித்து அதன் மூலமாக உங்களுக்கு சமாதானம் உண்டாகவேண்டும் என்றும் நான் ஜெபிக்கிறேன். நீங்களும் ஜெபியுங்கள்.

கர்த்தரின் உன்னத பணியில்

**டாக்டர்.புஷ்பராஜ்**

**STATEMENT OF OWNERSHIP AND OTHER PARTICULARS ABOUT NEWSPAPER JAMAKKARAN (FORM IV)**

| | | |
|---|---|---|
| 1. Title of the news paper | : | **JAMAKKARAN** |
| 2. Language(s) in which it is published | : | **TAMIL / MALAYALAM** |
| 3. Place of publication | : | 89,Majeeth Street,<br>Old Suramangalam,<br>Salem - 636 005. |
| 4. Periodicity of its publication | : | Monthly |
| 5. Printer's name | : | M.Velu |
| (whether citizen of India) | : | Indian |
| Address | : | P.M.Press<br>168,Arumuga Nagar, Salem-636 005 |
| 6. Publisher & Editor's name | : | **Dr.M.G.E.PUSHPARAJ** |
| (whether citizen of India) | : | Indian |
| address | | 89,Majeeth Street,<br>Old Suramangalam.<br>Salem - 636 005 |

I, **Dr.M.G.E.PUSHPARAJ** hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Dated: 10.3.2015 **Dr.M.G.E.PUSHPARAJ**

Salem - 5 Signature of Publisher & Editor

# வெள்ளை துணியில் ஒரு கருப்பு புள்ளி



பாஸ்டர். G.சுந்தரம் ஸ்தாபகர்

தமிழ்நாட்டில் முதல் பெரிய சபை பாஸ்டர்.சுந்தரம் என்ற தேவ மனிதர் 1949ம் ஆண்டு ஆரம்பித்த (ACA)அப்போஸ்தலிக் சர்ச் அசம்பளி என்ற சபையாகும். பாஸ்டர்.சுந்தரம் அவர்கள் கோயமுத்தூரிலிருந்து சென்னைக்கு கர்த்தரால் அழைப்பை பெற்றுவந்து ஆரம்பித்த சபைதான் பாஸ்டர்.சுந்தரம் அவர்களின் சபையாகும். சபை ஆரம்பிக்கும்போது நான்கு பிச்சைக்காரர்களை அழைத்து அவர்களுக்கு உணவுஅளித்து ஆராதனையில் உட்காரவைத்து ஆராதனை நடத்தினார். அநேக நாட்களுக்குப்பின் பாஸ்டர்.சுந்தரம் அவ்களின் சபை தமிழ்நாட்டிலேயே அதிக விசுவாசிகளை கொண்ட சபையாக மாறியது.

சகோ.தினகரன் அவர்கள்தான் 1968ம் வருடம் டிசம்பர் மாதம் பாஸ்டர்.சுந்தரம் அவர்களுக்கு என்னை மிகப்பெரிய கன்வென்ஷன் பிரசங்கி என்று புகழ்ந்து அறிமுகப்படுத்தினார். அதன்பிறகு அடிக்கடி பாஸ்டர் அவர்களோடு நான் நெருக்கமாக உறவாடாமல்போனாலும், ஒன்று, இரண்டு முறை வேதத்தின் ஆவிக்குரிய சந்தேகங்களை கேட்க வாரநாட்களில் பாஸ்டர் அவர்களை சந்தித்து நீண்டநேரம் உரையாடியிருக்கிறோம். என்னைக்குறித்து பலர் மூலமாக அதிகம் கேள்விப்பட்டிருக்கிறார்.

இந்தியாவில் முதல் முழுஇரவு ஜெபத்தை நானும், பாஸ்டர்.ஜீவானந்தம், சகோ.தினகரன், கனம் வேதநாயகசாஸ்திரியார் ஆகிய நான்கு பேரும் சென்னை சென்ட்ரல் ரயில்நிலையம் அருகேயுள்ள V.P.ஹால் என்ற கட்டிடத்தில் ஆரம்பித்தோம். அந்த முழு இரவு ஜெபம் நடத்துவது பாஸ்டர்.சுந்தரம் அவர்கள் அவ்வளவாக இஷ்டப்படவில்லை என்பதை சகோ.தினகரன் அவர்கள் கூறக்கேள்விப் பட்டேன். என்றாலும் அந்த ஜெபம் நடத்த எப்போதாவது நான் சென்னை செல்லும்போது பாஸ்டர்.சுந்தரம் அவர்களை எப்படியும் சந்தித்து பேசி, ஜெபித்து வருவேன்.

சகோ.தினகரன் அவர்கள் மிகவும் மதிக்கும், மிக முக்கிய ஊழியர்கள் பாஸ்டர்.சுந்தரம், பாஸ்டர். வாசு என்பவர்களாகும். அதனால்தான் சகோ.தினகரன் மகள் மரித்தபோது அந்த மரணம் கர்த்தரின் எச்சரிப்பு என்று தைரியமாக நேரில்சென்று நேருக்குநேர் கூறி உரிமையோடு அறிவித்த ஒரே ஊழியர் பாஸ்டர்.சுந்தரம் அவர்களாகும். பாஸ்டர்.சுந்தரம் அவர்களின் மரணத்துக்குபிறகு அந்த சபையில் மாலை நேர ஆராதனையில் மட்டும் பிரசங்கம் செய்துகொண்டிருந்த பாஸ்டர்.சுந்தரம் அவர்களின் மனைவியின் சகோதரரான பாஸ்டர்.சாம்சுந்தரம் அவர்கள் அந்த சபையின் தலைமை பாஸ்டராக 1989ம் வருடம் பொருப்பெடுத்தார். ஊழியம் விரிவடைந்தது. சபைக்கு புதிய இடம் பல கோடி ரூபாயில் வாங்கி ஆராதனை மிக சிறப்பாக நடந்துக்கொண்டிருந்தது.



பாஸ்டர்.சாம்சுந்தரம்

## பாஸ்டர்.சாம்சுந்தரம் வியாதி படுக்கையில்

கை-கால்கள் தளர்ந்து பாஸ்டர்.சாம்சுந்தரம் அவர்கள் வியாதி படுக்கையிலாகி ஞாபகசக்தியும் கொஞ்சம்கொஞ்சமாக இழக்க ஆரம்பித்தார். கிட்னி இயக்கம் குறைந்தது. அப்பெல்லோ ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

# பாஸ்டர்.காலேப் ஜாஷ்வாவின் தவறான நியமனம் -அது செல்லாத நியமனம்:

பாஸ்டர்.சாம்சுந்தரம் அவர்கள் வியாதி படுக்கையில் விழுந்தவுடன் அமெரிக்காவில் இருந்த பாஸ்டர்.சுந்தரம் (தலைமை பாஸ்டர்.ஸ்தாபகர்) அவர்களின் பேரனாகிய காலேப்ஜாஷ்வாவை அவசரஅவசரமாக வரவழைத்து அவசர கல்யாணம் செய்வதுபோல் ஒரு ஞாயிறு ஆராதனையில் பாஸ்டராக அபிஷேகம் செய்யப்பட்டார். அப்போதே சபையில்உள்ள மூன்று மூத்த பாஸ்டர்மார்களில் யாராவது ஒருவர் தலைமை பொருப்பெடுக்கவேண்டும் என்று போராட்டங்கள் நடந்தது. அந்த போராட்டம் தோல்வியடைந்தது.



வியாதி பாடுக்கையில் பாஸ்டர்.சாம்சுந்தரம்

அன்று நான் ஜாமக்காரனில் எழுதியதை வாசகர்கள் அறிவார்கள் என்று நம்புகிறேன். அநேக போராட்டங்கள் நடுவில் காலேஜ் ஜாஷ்வா அவர்கள் தலைமை பாஸ்டராக நியமனம் நடந்துமுடிந்துவிட்டப்படியால் இனி வாக்குவாதம் பிரச்சனைகள் உண்டாக்காமல் பாஸ்டர்.சுந்தரம் வளர்த்த சபையில் உள்ள பாஸ்டர்கள், கிளை சபை பாஸ்டர்கள் சபைவிசுவாசிகள் யாவரும் பாஸ்டர்.காலேப்பை ஊழியத்தில் சமாதானத்துடன் பெலப்படுத்துங்கள். அனுபவம் இல்லாத சிறிய வயதுடைய வாலிபன் ஆகவே சீனியர் பாஸ்டர்கள் அவருக்கு ஆலோசனை அளித்து பழையதை மறந்து நல்லசபை சாட்சியிழந்துவிடாதபடி பாஸ்டர்.காலேப்க்கு மூத்த பாஸ்டர்கள் ஒத்துழைப்புதந்து சபை வளர உதவுங்கள் என்று எழுதினேன்.



பாஸ்டர்.சாம்சுந்தரம், பாஸ்டர்.காலேப்

ஆனால் அன்றேக்கே காலேபை நியமித்தது செல்லாது நாங்கள் கோர்ட்டுக்கு போகபோகிறோம் என்றவர்களை தொலைபேசியில் அமைதிப்படுத்தினேன். கோர்ட்போக முயன்றவர்கள் பக்கம் சில நியாயங்கள் இருந்தது. சபையில் எத்தனையோ ஒய்வுபெற்றமூத்தபாஸ்டர்கள்இருக்கும்போது அருகாமையில் அனுபவமுள்ள பாஸ்டர்.ஹென்றி ஜோசப், பாஸ்டர்.மோகன் ஆகியவர்கள் இருக்கும்போது அவர்கள் காலேப்ஜாஷ்வாவை கைவைத்து தலைமை பாஸ்டராக அபிஷேகம் செய்ய ஏற்பாடு செய்திருக்கலாம். ஆனால் நடந்ததோ மிகவும் தவறான முன்னுதாரணமாகிபோனது. அதாவது பெந்தேகோஸ்தே சபைக்கு சம்பந்தமில்லாத லூத்தரன், சிஎஸ்ஐ சபையை சார்ந்த ஒரு சுவிசேஷகனான சகோ.ஜான்சாலமோன் ஒருவரை தலைமை பாஸ்டராக நியமிக்க தன் கைகளை வைத்து அபிஷேகிக்க பெந்தேகோஸ்தே சபைகளின் நடைமுறை வழக்கத்தில் இல்லாத ஒன்றாகும். அது பெந்தேகோஸ்தே சபைகளில் ஏற்றுக்கொள்ளாத சம்பவமாக அமைந்துவிட்டது.

சகோ.ஜான் சாலமோன் அவர்கள் என்னை போல் ஒரு சாதாரண சுவிசேஷகன் ஆகும். அதுவும் பெந்தேகோஸ்தே அல்லாத சபையை சார்ந்த ஒருவர் இத்தனை பிரம்மாண்ட முக்கிய சபைகளுக்கு தலைமை பாஸ்டர் பொருப்புக்கு ஒருவரை கைவைத்து அபிஷேகிக்க பெந்தேகோஸ்தே சபைகளின் அனுபவ சட்டம் இடம் கொடுக்கவில்லை.

ஆகவே காலேபின் தலைமை பாஸ்டர் நியமனம் செல்லாது என்று கூறி கோர்ட்டுக்கு செல்ல துடித்தவர்களை நான் ஒரு சில நண்பர்கள் மூலமாக அடக்கினேன். ஆனால் நான் நல்ல ஆவிக்குரிய

சபை கோர்ட்டுக்கு போகக்கூடாது என்ற எண்ணத்தில் பாரப்பட்டேன். ஆனால் கோர்ட்டைவிட அசிங்கமாக, சாட்சி கெட்டநிலையில் **சபை ஆராதனையையே** நடத்தவிடாமல் செய்ததும், சட்டசபையில் அரசியல்கட்சிகள் நடப்பதுபோல் மைக்கை உடைப்பது, பாஸ்டரை பிடித்து தள்ளுவது அத்தனையும் **சினிமா படம்போல்** அவரவர்கள் மொபைலில் படம் எல்லாரும் அறியும்வகையில் பெரும்பாலானவர்களுக்கு அந்தகாட்சி அனுப்பப்பட்டது. எடுத்து தமிழ்நாடே சிரிக்கும்நிலைக்கு தள்ளப்பட்டது மிககேவலம் ஆகும்.

## வதந்திகள்:

வீட்டு சிறையில் எங்கள் பாஸ்டர் வைக்கப்பட்டிருக்கிறார் என்று மற்றொரு செய்தி வெளியானது. **செக்களில்** பாஸ்டர்.சாம்சுந்தரத்தின் கையெழுத்தை கட்டாயப்படுத்தி பெற்றுவிட்டார்கள் என்று விதவிதமான வதந்திகள் தீயாக தமிழ்நாடு முழுவதும் பரவின. இதற்கு முக்கிய காரணம், **பாஸ்டர். காலேபின்** அனுபவ குறைவாகும். பாஸ்டர் உடல்நலம் சரியில்லை. சபை மக்கள் பாஸ்டரை கண்ணால் பார்க்க ஆசைப்படுகிறார்கள். பார்க்க அனுமதிக்காது போனதால்தானே விதவிதமான வதந்திகள் பரவி தினசரி செய்திதாள்களில் வெளியானது. சாப்பாட்டில் மெதுவாக சாகடிக்கும்விஷம் கலக்கப்பட்டிருக்கிறது என்று போலீஸ்சுக்கு புகார் எழுதி கொடுத்திருக்கிறார்கள். காலேப் மனைவி **கெத்சி** சபையில் நடந்து கொண்டவிதமும், பேசிய கோப வார்த்தைகளும் சபை மக்களை கோபத்தின் எல்லைக்கே கொண்டு போய்விட்டது. போலீஸ் உயர்அதிகாரிகளோடு சபைக்கு வந்தது. உயர் போலீஸ் அதிகாரிகளைக்கூட, விசாரணை செய்ய பாஸ்டர்.சாம்சுந்தரத்தை பார்க்க அனுமதிக்க மறுத்தது. இவைகள் யாவும் சாட்சி கெட்ட பிரச்சனைகளின் உச்சக்கட்டமாகும். ஒரு வழியாக கடைசி முயற்சியாக பாஸ்டர்.காலேபை உள்ளே வைத்து வெளியே வரமுடியாதபடி பூட்டிவிட்டார்கள். ஒரு வழியாக பாஸ்டர்.சாம்சுந்தரம் அவர்கள் ஞாயிறுஆராதனையில் காட்சியளித்தார். அவர் பேசினார் உயிரோடு இருக்கிறார் என்பதை உறுதிப்படுத்தினார்கள். சபை மேடையில் வீல்சேரில் அமர்ந்தபடி பேசினார். கொந்தளிப்பு அடங்கியது. வதந்திகள் பொய்யாகின.

‘ அடுத்த வதந்தி சுமார் 2000கோடி காணிக்கை வருமானம் உள்ள ஒரு சபையின் பணம் காலேபினால் கொள்ளையடிக்கப்படுமோ என்றும் சந்தேகப்பட்டனர். அந்த ஒரே காரணத்தால்தான் சபை சொத்துக்களை, பணத்தை வெளிஆட்கள் அனுபவிப்பதைவிட சொந்த பேரன் அனுபவிக்கட்டுமே என்ற உள்நோக்கம் இதில் உண்டு என்றாலும், இது தமிழ்நாட்டில் உள்ள குடும்ப கட்சிகளைப்போல், **சொந்தபிள்ளைகளும், பேரன்மார்களும்,** உறவினர்களும் அல்லது **வளர்ப்புமகன்களும்** அரசாங்க பணத்தை, சொத்தை கொள்ளையடிப்பதைப்போல் ACA சபையில் செய்யமுடியாது. ஸ்தாபகரும், தலைமை பாஸ்டருமான மறைந்த சுந்தரம் அவர்கள் மிக ஞானத்துடன் சபை சொத்துக்களை, சபையையும், சபை பணத்தையும் TRUSTஆக பதிவுசெய்யாமல் SOCIETIES சட்டத்தில் பதிவு செய்ததால் அவரவர் இஷ்டத்துக்கு பணத்தையோ, சபை நிலத்தையோ, அதை சார்ந்த வீட்டையோ யாரும் குறப்பாக **பாஸ்டர்.காலேப்**கூட உரிமை கொண்டாடமுடியாது. விற்க அடமானம் வைக்கமுடியாது. உயிரோடு இருக்கும்வரை பணத்தை அனுபவிக்கலாம். அதற்கும் அரசாங்கத்துக்கு கணக்கு காட்டவேண்டும். சொசைட்டி சட்டம் அப்படி கூறுகிறது.

‘ எப்படியோ பாஸ்டர்.சாம்சுந்தரம் நேரில் வந்து பேசியபின் சபைக்குள் அமைதி உண்டானது. ஆனால் பிப்ரவரி மாதம் ஆராதனை நடத்தவிடாமல் மேடையில் நடந்த சண்டையை சபை வாலிபர்கள், புது விசுவாசிகள் சபை மக்கள் கண்டபோது சண்டை போட்டவர்களையும், சண்டையிட காரணமான காலேபையும், மேடையில் காலேப் மனைவி **கெத்சியா** பேசிய வார்த்தைகளையும் கேட்டவர்கள் என்ன நினைப்பார்கள்?. இதில் ஆவியின் நிறைவு, அந்நியபாஷையும் காணப்பட்டன. ஆனால் ஆவியின் கனியில்லாத ஆவியின் சுபாவம் இல்லாத பொய்யான நிறைவுதான் அங்கு காணப்பட்டது.

**சபைமக்களும், சபை பாஸ்டர்களும், சண்டையிட்ட பாஸ்டர்களும், ஜெபத்தில் அன்று பேசிய அந்நியபாஷைக்கு என்ன அர்த்தம். இதை மட்டும் சபை மக்கள் யோசித்தால் தெளிவு பெறுவார்கள். கலாத்தியரில் எழுதிய ஆவியின் கனிகள், ஆவியின் சுபாவங்கள் எங்கே? அவர்களுக்குள் இருந்த ஆவி! என்ன ஆவி? இனியாவது பரிசுத்த ஆவியானவரின் நிறைவை சத்தத்தில் காண்பிக்கவேண்டாம். அந்நியபாஷையில் காண்பிக்க வேண்டாம். கனியில் (சுபாவத்தில்) காண்பியுங்கள். இனியாவது போலியான அந்நியபாஷையை பேசவேண்டாம்.**

‘ **பாஸ்டர். சுந்தரம் அவர்கள் உயிரோடு இருந்திருந்தால் கண்ணீர்விட்டு கதறியிருப்பார். நம்மை ரட்சித்த இயேசுகிறிஸ்து கண்ணீர் விடுகிறார். வெள்ளை துணியில் சிறு கருப்பு புள்ளியும் மிக தெளிவாக தெரியும். அந்த** ACA **சபை மக்கள் சாட்சியாகயிருங்கள்.**

CSI **சபைகள்தான் செத்துப்போன சபை என்றார்கள். இப்படிப்பட்ட பெந்தேகோஸ்தே சபைகளின் இப்படிப்பட்ட சண்டையில் செத்துப்போன பிணம் பாஷை பேசுவதாகத்தான் மற்றவர்கள் நினைப்பார்கள்.**

### தேவன் தம்மை பரியாசம் பண்ணவொட்டார்:

**பாஸ்டர். சாம்சந்தரத்தின் மரணத்தை பாஸ்டரின் வீட்டுக்குள்ளேயும், சபையிலும் எதிர்ப்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். பிரச்சனைகள் நீருபூத்த நெருப்பாகத்தான் இருக்கிறது. நெருப்பு இன்னும் அணையவில்லை.** ACA **சபைக்காக தொடர்ந்து ஜெபிப்போம்.**

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

## தொலைபேசி புகார்:

என்னோடு தொலைபேசியில் தொடர்புக்கொள்ள முடியவில்லை, எப்போதும் உங்கள் தொலைபேசி எண் பிசியாகவே இருக்கிறது. உங்கள் நெம்பருக்கு போன் செய்தால் யாரும் எடுப்பதில்லை என்ற புகார் தொடர்ந்து வந்த வண்ணமாக இருக்கிறது. வாரத்தில் ஒருநாள் மட்டும் **செவ்வாய்கிழமைமட்டும்** வீட்டில் நான் இருப்பதைக்குறித்தும் ஒரே நாளில் அதிகாலை யிலிருந்து நூற்றுக்கணக்கான தொலைபேசி அழைப்புகள் வந்துக்கொண்டேயிருக்கிறது. என் வீட்டில் நான்கு தொலைபேசி உண்டு. ஒருவரோடு பேசிகொண்டு இருக்கும்போது எப்படி மற்ற தொலைபேசியில் நீங்கள் அழைத்தால் உங்களோடு பேசமுடியும். ஒருவரிடம் பேசிவிட்டு அல்லது அவருக்கு ஆலோசனை கூறிவிட்டு அல்லது ஜெபித்துவிட்டுதான், உங்கள் Callயை அட்டன்ட் செய்யமுடியும். எனக்கு ஆபீஸில் வரவேற்பாளர் இல்லை. டாக்டர் மற்ற போனில் பேசிகொண்டிருக்கிறார் என்று கூறி உதவவும் ஆட்கள் இல்லை. இதற்கென்று ஆட்களை நியமித்தாலும் பிரயோஜமில்லை. காரணம் நான் வீட்டில் இருப்பது ஒரே ஒருநாள்மட்டுமே அல்லது இரண்டு நாட்கள்மட்டுமே நான் இருப்பேன். ஆலோசனையோ-ஜெபமோ நான் மட்டுமே கொடுக்கமுடியும். என் மனைவி அநேகருக்கு ஜெபித்து ஆலோசனையும் கூறுகிறார்கள். ஆகவே என்னோடு தொலைபேசியில் தொடர்புகொள்ளமுடியாதவர் உங்கள் ஜெபகுறிப்புகளை, சந்தேகங்களை, ஆலோசனைகளை கடிதத்தில் எழுதுங்கள் அல்லது இ-மெயிலில் அனுப்புங்கள். உடனே பதில் எழுதமுடியாவிட்டாலும் தாமதமாகவாவது நிச்சயம் ஜெபித்து பதில் எழுதமுடியுமே!. ஆகவே தொலைபேசியில் என்னோடு தொடர்புக்கொள்ளமுடியாதவர்கள் கடிதம்மூலம் தொடர்புக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

## அறிவிப்புகள்:

ஜாமக்காரனில் நான் எழுதும் அறிவிப்புகளை தயவுசெய்து கவனியுங்கள். அறிவிப்புகளை நிறையபேர்கவனிக்காததால் பலர் **விலாசம்புதுபிக்கும் பாரத்தை**(Form) பூர்த்திசெய்து அனுப்பவில்லை ஆகவே பலருடைய பெயர்களை விலாச பட்டியலிலிருந்து நீக்கிவிட்டோம். எனவே மீண்டும் உங்களுக்கு ஜாமக்காரன்வேண்டும்என்றால் பழைய கணணிஎண் மற்றும் விலாசத்துடன் தொடர்புக்கொள்ளவும்

# ஓபாமாவின் செய்தியும்-எச்சரிப்பும்:

இந்தியாவின் **ஒரே மதம்** இந்துமதம். ஒரே சட்டம் சிவில் சட்டம். ஒரே மொழி ஹிந்தி. தாய் மதத்துக்கு மதமாற்றம். இந்தியா இந்துக்களுக்கே!. கீதை இந்தியாவின் புனித நூல். கட்டாய மொழி திணிப்பு **சமஸ்கிருதம், ஹிந்தி என்றதும், கிறிஸ்மஸ்க்கு** இனி விடுமுறை கிடையாது என்று கூறியது பல தீவிரவாத மதவெறி கொள்கை அறிவிப்புகளை இந்தியாவின் இந்துமத தீவிரவாத அமைப்புகள் கூறியது அமெரிக்காவிலேயே ஒபாமாவுக்கு அறிவிக்கப்பட்டது என்பதற்கு ஒபாமாவின் இந்திய குடியரசு தின செய்தி மூலம் அறியலாயிற்று.



## ஓபாமாவின் குடியரசு தின செய்தி:

இந்தியா மக்கள் அத்தனை பேர்களும் உலக நாடுகளும் ஆவலோடு கவனித்த **ஒபாமாவின்** பேச்சு இந்திய பிரதமருக்கும், ஆளும் BJP கட்சிகளுக்கும் குறிவைத்து கொடுத்த ஆலோசனைப் போன்ற ஒரு எச்சரிப்பாக அவர் பேச்சு சிறப்பாக அமைந்தது.

மேலும் குடியரசு தினத்தன்று ஊர்வல காட்சி வாகன விளம்பரங்களில் **இந்திய அரசியல் சாசனம்** என்று எழுதப்பட்டத்தில் **மத சார்பற்ற நாடு இந்தியா(SECULAR)** என்ற மிக முக்கிய வார்த்தையும் **சோஷலிசம்** கொள்கையுடைய **இந்தியா** என்ற முக்கிய வார்த்தையும் நீக்கப்பட்டிருந்தது.

இவைகளெல்லாம் அமெரிக்க அதிபர் ஒபாமாவின் உள்ளத்தில் பெரும் உளைச்சலை உண்டாக்கியிருக்கவேண்டும். அது அவர் பேச்சில் திட்டமாக வெளிப்பட்டது.

- ஒபாமா அவர்கள் பேசியதாவது: இந்தியா **மத நல்லிணக்கத்தை** இந்தியாவில் வாழும் அனைத்து தரப்பு மக்களும் உறுதியுடன் பின்பற்றவேண்டும். இந்திய துணைகண்டத்தில் **மதரீதியாக** ஒரு நாளும் **பிரிவினை** ஏற்பட்டுவிடக்கூடாது. நாடு ஒற்றுமையாக இருந்தால்தான் இந்தியாவுக்கு பொருளாதார வெற்றிகள் குவியும். மத சுதந்திரத்தை பாதுகாக்கும் பொருப்பு அரசுக்கு மட்டுமல்ல. இந்தியகுடிமகன் ஒவ்வொருவனுக்கும் இருக்கிறது. பலமுக தன்மைத்தான் நமது பெலம்.

உலகில் கிறிஸ்தவம், இஸ்லாம், புத்தமதம், இந்துமதம் போன்ற மதங்கள் உள்ளன. இத்தனை மதங்களும் உலகம் என்ற ஒரே தோட்டத்தில் மலர்ந்த **மலர்களாகும்.** மனிதர்களில் நிறம்,இனம்,மதம் என்ற எவ்வித பாகுபாடும் யாரும் பார்க்ககூடாது. மனித உரிமைகளுக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். எனது (ஒபாமா) ஆரம்பகால வாழ்க்கையில் என் தோலின் கருப்பு நிறத்தினால் சில மோசமான அனுபவங்கள் எனக்கு நேரிட்டன. அந்த மோசமான அவமானங்கள் அனுபவங்களை யெல்லாம் தாண்டித்தான் நான் **அமெரிக்க நாட்டு அதிபராக** உயர்ந்துள்ளேன்.

- **மார்டீன் லூத்தர் கிங், மகாத்மா காந்தி** போன்ற மாபெரும் தலைவர்கள்தான் எனக்கு ரோல் மாடலாக கவனித்து முன்னேறினேன்.

## ஓபாமாவின் சொந்த அனுபவ சாட்சி:

- அமெரிக்காவில் நான் **சிறுபான்மை கருப்பு இனத்தை** சேர்ந்தவன். எனக்கு பதவியில் அரசியலில் ஏராளமான வாய்ப்புகள் தேடி வந்தது. ஆனால் நான் கருப்பு இனத்தை சேர்ந்தவன் என்பதால் என்னை வெள்ளையர்களால் பாரபட்சமாகவே நடத்தப்பட்டேன். **கிறிஸ்தவ நாடாகிய**

அமெரிக்காவில் **நான் கிறிஸ்தவனே அல்ல** என்று என் முன்னேற்றத்தை தடுக்க சிலர் வதந்திகளை பரவவிட்டார்கள். வேறு சிலர் ஒபாமா ஒரு **முஸ்லீம்** என்றும் பொய் பிரசரங்களை செய்தார்கள். அந்த வதந்திகளை நம்பின பலர் நான் போகும் இடமெல்லாம் இவைகளைக்குறித்து கேள்வி எழுப்பி என் பிறப்பைக்குறிப்பிட்டு அவமானப்படுத்த முயன்றார்கள். உலகில் **நாம் தேடும் அமைதி** என்பது மனிதனின் **இதயத்திலிருந்துதான்** ஆரம்பமாகிறது என்பதை நாம் எல்லாரும் உணர வேண்டும்.

கடைசியாக ஒபாமாவின் உச்சக்கட்ட செய்தியாக அவர்கள் கூறி முடித்தது என்னவென்றால், ஒவ்வொரு மனிதனும் தன் மத நம்பிக்கையை எந்தவிதமான அச்சமும், பாகுபாடும் இல்லாமல் தொடர இந்த நாட்டில் உரிமையுள்ளது. அதே நேரத்தில் **மத அடிப்படையில்** இந்தியா பிளவுபடாதவரை **இந்தியா வெற்றி பெறுவது** நிச்சயம் என்றார்(அதன் அர்த்தம் மத அடிப்படையியல் இந்திய பிளவுபட்டதேயானால் எந்த முன்னேற்றமும் அடையமுடியாது என்பதே) மேலும் அவர் குறிப்பிட்டதாவது இந்திய அரசியல் சட்டத்தின் 23வது பிரிவானது இந்தியாவில் வாழும் அனைவரும் தங்களின் மத நம்பிக்கைகளை தடையின்றி தொடர அந்த சட்டம் மக்களுக்கு சுதந்திரம் அளிக்கிறது. அந்த நம்பிக்கைகளை விருத்தி செய்யவும் சுதந்திரம் அளிக்கிறது. **இந்தியா-அமெரிக்கா** மட்டுமல்லாமல் அனைத்து உலக நாடுகளும், **மத சுதந்திரத்தை** பேணிக் காக்க வேண்டிய பொருப்பு உள்ளது. அது ஒவ்வொரு நபரின் கடமையாகும் என்று தன் நீண்ட உரையை கூறி முடித்தார்.

இந்தியாவில் குடியரசு தினத்தில் ஒரு வெளிநாட்டு ஜனாதிபதி இத்தனை நீண்ட நேரம் பிரசங்கம் நிகழ்த்தியது கிடையாது. இந்தியாவின் தற்போதைய மதவெறி உள்ள தலைவர்களையும் அவர்களின் செயல்களையும் மனதில் கொண்டு அதன் அடிப்படையில்தான் மேலே கூறிய முக்கிய ஆலோசனைகளை செய்தியாகவும் இந்திய நாட்டு தலைவர்களுக்கு ஒரு எச்சரிப்பாகவும் மிக தைரியமாக ஒபாமா கூறி அமர்ந்தார். அவர் நிகழ்த்திய பிரசங்கத்தில் நம் நாட்டு சட்டங்களைப்பற்றியும் அவைகளை மிகத்தெளிவாக படித்தறிந்து இந்திய அரசியல் சட்டத்தின் 23வது பிரிவை தெளிவாக அவர் மேற்கோள்காட்டி பேசியது இந்திய தலைவர்களுக்கு குறிப்பாக BJP, RSS போன்ற தலைவர்களுக்கு **ஒபாமாவின்** அந்த பேச்சு பெரும் அதிர்ச்சி வைத்தியமாக அமைந்தது என்றால் மிகையாகாது.

## மற்றொரு இடத்தில் ஒபாமா பேசியது:

ஒபாமா மற்றொரு நிகழ்ச்சி ஒன்றில் பேசுகையில் அவர் குறிப்பிட்டதாவது: **நானும், என் மனைவி மிச்செலும்** இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டோம். இந்தியா மிக அற்புதமான, அதேசமயம் **பலமுக தன்மைகொண்ட** அழகான நாடாகும். இந்தியாவின் ஒவ்வொரு கலாச்சாரத்தையும், நானும் என் மனைவி மிச்செலும் கண்டு வியந்துபோனோம்.

ஆனால் மனம் வருந்தக்கூடிய விஷயமாவது என்னவென்றால்: இந்தியாவில் சில காலங்களாக பல்வேறு மதங்களை சேர்ந்தவர்களின் மதகோட்பாடுகளை அவர்களின் கலாச்சார நிகழ்ச்சிகளை மாற்ற முயற்சி செய்யும் விதமாக இந்து மதத்தில் உள்ள சிலர் மற்ற மதத்தினரை குறிவைத்து தொடர்ந்து தாக்குகிறார்கள். இப்படிப்பட்ட சம்பவங்கள் இந்தியாவில் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. இந்தியாவில் நிலவும் இப்படிப்பட்ட மத சகிப்புத்தன்மை இல்லாத நிலையை இந்திய நாட்டின் விடுதலைக்காகவும், சுதந்திரத்துக்காகவும் பாடுபட்ட **மாகத்மா காந்தி** அவர்கள் உயிரோடிருந்து இவைகளைப் பார்க்க நேர்ந்தால் அவர் மிகவும் அதிர்ந்துபோயிருப்பார் என்றார். இவரின் இந்த பேச்சு BJP-RSS மற்றுமுள்ள மத தீவிரவாத தலைவர்களுக்குள் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

## பிரதமர்.மோடி அவர்களின் திடீர் மனமாற்றம்:

திரு.மோடி அவர்கள் சிறு பையனாக டீ கடையில் கூலி வேலை செய்துகொண்டிருக்கும் போதே இந்துமத வைராக்கியம் மனதில் ஆழமாக பதித்துக்கொண்டவர். அந்த சிறுவயதிலேயே RSS

என்ற இந்துமத தீவிரவாத இயக்கத்தில் தன்னை இணைத்துக்கொண்டு இந்துத்துவம் என்ற இந்துமத தீவிரவாத மதவெறியை மனதின் ஆழத்தில் பதித்துக்கொண்டவர். அதனால்தான் RSS,பஜ்ரங்தள், VHP ஆகிய தீவிரவாத இயக்கங்கள் செய்த **ஆலய இடிப்பு,தாய்மத மாற்றம்** மற்றும் பல இடத்தில் மத கலவரம் இத்தனை நடந்தும் பார்லிமெண்டில் எதிர்கட்சிகள் போராட்டம் நடத்தியும் அந்த தீவிரவாதங்களுக்கு சாதகமாக எதிர்கட்சியினர் கேள்விக்கு பதில் கூறாமலும், தன் சுளுளு இயக்கத்தினரை கண்டிக்காமாலும் இருந்தார்.

அமெரிக்க ஜனாதிபதியின் குடியரசு தின செய்தியும், எச்சரிப்பும், டெல்லி தேர்தலில் தன் கட்சியான BJP படுதோல்வியை சந்தித்ததும் மோடியின் முகத்துக்காக பல்வேறு மாநிலங்களில் தேர்தலில் ஜெயித்த BJP கட்சி, டெல்லி தேர்தலில் மக்களின் மனமாற்றத்தை கண்டனர். மோடியின் முகம் இப்போது மக்களுக்கு பயத்தை உண்டாக்கியது. இந்தியாவில் இனி எந்த மதகலவரம் வெடித்தாலும் மோடி அவர்கள் கண்டுக்கொள்ளாமல் போனால் இந்தியா என்னவாகும் என்று யோசித்தப்பின் டெல்லியில் டீதீயை தோற்கடித்து அதிர்ச்சி வைத்தியம் செய்தனர். அதன் விளைவுதான் திரு.மோடி அவர்களின் மனந்திரும்பிய அறிக்கையின் பிரசங்கம்.

திரு.**மோடி** அவர்கள் கூறியதாவது: நாட்டில் வெறுப்புணர்வை துாண்டிவிட இந்திய நாட்டில் எந்தவொரு மதக்குழுவையும் **என் அரசு இனி அனுமதிக்காது**. மத வன்முறைகளுக்கு எதிராக இனி என் அரசு கடும் நடவடிக்கை எடுக்கும்.

இந்தியாவில் ஒவ்வொரு குடிமகனுக்கும் யாருடைய நிர்பந்தமுமில்லாமல் தாங்கள் விரும்பிய மதத்தை பின்பற்றுவதற்கான **மறுக்க முடியாத உரிமை** உள்ளது. இப்படிப்பட்ட மத வழிபாட்டு சுதந்திரத்தை எனது அரசு உறுதி செய்யும். பெரும்பான்மையினரோ அல்லது சிறுபான்மையினரோ யாராக இருந்தாலும் பிறர்மீது வெறுப்புணர்வை துாண்டிவிட மத்திய அரசு அனுமதிக்காது. இந்தியாவில் உள்ள அனைத்து மதங்களுக்கும் எனது அரசு சம மரியாதையும், அந்தஸ்தையும் அளிக்கிறது.

எதையோ காரணம் காட்டி ஒரு மதத்தின் மீது வன்முறை கட்டவிழ்த்துவிடப்படுவதை ஏற்க முடியாது. நடந்துமுடிந்த இத்தகைய வன்முறைகளை நான் வன்மையாக கண்டிக்கிறேன். இந்த விஷயத்தில் எனது அரசு உறுதியுடன் செயல்படும். இந்தியா மதசார்பற்ற நாடாகவே இருக்கும். மதம் என்பது **தனிநபர்** சுதந்திரம் சார்ந்தது. மத வெறுப்பை பரப்ப இங்கு(இந்தியாவில்) யாருக்கும் அனுமதியில்லை. முழு மத சுதந்திரத்தை எனது அரசு உறுதி செய்யும். மதவெறி கூடிக்கொண்டே வருகிற இந்த காலத்தில் நாம் அனைத்து மதத்தையும் மதித்து நடப்பது என்பது நமது இரத்தத்தில் ஒடவேண்டும். பிற மதத்தை மதிப்பது சகிப்புத்தன்மை ஆகியவை நமது பண்டைய பாரத தேசத்தின் ஆத்ம நெறி.

**இந்தியாதான் என் மதம். இந்திய அரசியல் அமைப்பு சட்டம்தான் என் மத நூல்** ஆகும் என்று கூறியிருக்கிறார்.

இது நல்ல சந்தோஷ மாற்றம்தான். ஆனால் இவர் இப்படி பிரசங்கித்த இடம் தேவலாயம் எரிக்கப்பட்ட டெல்லியில் கிறிஸ்தவர்கள் நடத்திய ஒரு கூட்டத்தில் இப்படி பேசியிருக்கிறார். ஆனால் இதே செய்தியை இவருடைய RSS இயக்க கூட்டத்தில் பேசியிருந்தால் இந்திய மக்கள் பிரதமரின் மீது கூடுதல் நம்பிக்கை கொள்ள ஏதுவாக இருந்திருக்கும். கிறிஸ்தவர்கள் மக்கள் மத்தியில் அவர்களை திருப்திப்படுத்தும் வகையில் பேசியிருப்பாரோ அரசியல்வாதிகள் இடத்துக்கு தக்கவாறு பேசுவதில் சிறப்பு பெற்றவர்கள் என்று அரசியல் கணிப்பாளர்கள் கருதுகிறார்கள். என்றாலும் பிரதமரின் மாற்றங்கள் போகபோகத்தான் தெரியும்.

பிரதமருக்காக ஜாமக்காரன் வாசகர்கள் அனைவரும் தொடர்ந்து ஜெபிப்போம்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

# கேள்வி – பதில்

## ஜாமக்காரனின் பதில்கள்



### புதிய ஆட்சி

**கேள்வி: இலங்கையின் இப்போதைய புதிய ஆட்சி யாழ்பாண தமிழர்களுக்கு சுய ஆட்சி கொடுக்க முன்வருமா?**

**பதில்:** *நிச்சயமாக சுய ஆட்சி கொடுக்கமாட்டார்கள். புத்தபிக்குகளின் பிடியில்தான்* ***இலங்கை*** *நாடும், நாட்டை ஆள்பவர்களும் இருக்கவேண்டும். இதுதான் இலங்கையின் வழமையான நிலை ஆகவே புத்தபிக்குகள்* ***யாழ்பாணத்துக்கு(Jaffna)*** *சுய ஆட்சி கொடுக்க அனுமதிக்கமாட்டார்கள்.*

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

### புதிய அதிபர்

**கேள்வி: இலங்கையின் புதிய அதிபரைப்பற்றி உங்களுக்கு தெரியுமா?.**

**பதில்:** *தெரியாது!.* ***ராஜபக்ஷே*** *ஆட்சி காலத்தில் மந்திரியாக இருந்தார் என்பதை அறிவேன். அதைத்தவிர மேல்விவரங்கள் நான் அறியேன். ஆனால் அவரின் பெயர் மறக்க முடியாத மிக நீளமான பெயர் ஆகும். உலகிலேயே மிக நீளமான பெயர்* ***புரூனே*** *சுல்தானுடையது என்று அறிவேன். ஏறக்குறைய இலங்கை அதிபரின் பெயரும் அந்த நீளத்துக்கு வரும் அதிபரின் முழுபெயர்* ***பல்லேத்தை கமரலா லாகே மைத்ரீபால யாப்பா சிறிசேனா*** *என்பதாகும். ஆகவே அதை சுருக்கி சிறிசேனா என்று குறிப்பிடுகிறார்கள். இவர் ஆட்சி பொருப்பேற்றதும் மிக ராஜதந்திரமாக இலங்கைக்கு* ***சுப்ரீம் கோர்ட்*** *தலைமை நீதிபதியாக ஒரு* ***தமிழ் நபரை*** *நியமித்தது* ***யாழ்பாண*** *தமிழர்களை திருப்திப்படுத்தி தமிழ் மக்களை தன் பக்கம் இழுக்க செய்யப்பட்ட நல்ல ராஜதந்திரமாகும். இனி போகபோகத்தான் அதிபரின் அணுகுமுறை தமிழர்களின் விஷயத்தில் எப்படியிருக்கும் என்பதை கூற முடியும்.*

*உலக கணக்கெடுப்பில் மிக அதிகமான* ***பெண்கள் விதவைகளாக*** *இருப்பது* ***யாழ்பாணம்*** *தமிழர் பகுதியில்தான் என்பது மிககொடூரமான செய்தியாகும். உடல் உறுப்புகளை இழந்தவர்கள் கைகள், கால்கள், கண்கள் ஆகிய* ***உடல் உறுப்புகளை*** *இழந்து இப்போதும்* ***சாகாத பிணங்களைப் போல் வாழ்பவர்கள் எண்ணிக்கை லட்சக்கணக்கில் காட்டப்படுகிறது. மனநோயால்*** *பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையும் மிக அதிகம். கண் முன்னால் யாழ்பாண மக்களின் சொந்த காணி உண்டு. உழுது பயிரிட அனுமதியில்லை.* ***சொந்த வீடு*** *உண்டு, அதில் போய் குடியிருக்க அனுமதியில்லை. இப்படிப்பட்ட கொடூரமான சூழ்நிலையை மாற்ற யாழ் மக்கள் அவரவர் நிலத்தை அவரவர் பயிரிட்டு உயிர்வாழ போர் கால நடவடிக்கையாக* ***புதிய அதிபர்*** *ஏதாவது நடவடிக்கை எடுத்து உதவினால் யாழ் மக்களுக்கு சிறிய அளவாவது ஆறுதல் கிடைக்குமே!. செய்வாரா? ஜெபிப்போம். இலங்கையில் ஆட்சி மாறியது- ஆனால் காட்சிகள் மாறுமா?*

*2015 மார்ச் மாதம் **இந்திய பிரதமர்.திரு.மோடி** அவர்கள் இலங்கை சென்று யாழ்பாண மக்களையும் சந்தித்து ஏற்கனவே இந்தியா கட்டித்தந்த வீடுகளில் தமிழ் மக்களை குடியேற செய்து வந்ததும் இன்னும் பல ஆயிரம் வீடுகளை இந்தியா கட்டிக்கொடுக்க உடனடி ஏற்பாடுகளை செய்ததும், இந்திய ரயில்வே பணியாளர்களை அனுப்பி **கொளும்பு - யாழ்பாணம்**(யாழ்தேவி ரயில்) இப்போது தலைமன்னார் வரை ரயில்பாதையும்,ரயில் பெட்டிகள் இஞ்சின் ஆகியவைகளை அனுப்பி ரயிலை இயக்கி திறப்புவிழா நடத்தி வந்த காட்சியை டிவியில் பார்த்தேன்.*

*இலங்கை உள்நாட்டு போரில் சீரழிந்த தமிழ்நாட்டு பொருளாதாரம் முன்னேற இலங்கை பண மதிப்பு சரிந்ததை சீர்ப்படுத்த பல கோடிகள் இந்தியா கொடுத்து உதவியது. இலங்கையின் பலவருட சீர்அழிவுக்கு இந்தியாவும் உடந்தையாக இருந்ததை உணர்ந்து பாவமன்னிப்பு கேட்டு பரிகாரம் செய்ததுபோல் மேற்கூறிய பொருளாதார உதவிகள் அமைந்தது. இலங்கையின் மறுமலர்ச்சிக்காக நாம் செய்த ஜெபம் கேட்கப்பட்டதை போல் மேற்குறிப்பிட்ட காட்சிகள் அமைந்தன. தொடர்ந்து இலங்கைக்காக ஜெபிப்போம்.* ❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

# உப்பு போடலாமா?

**கேள்வி: கிறிஸ்தவர் ஒருவர் இறந்துபோனால் குழியில் உடலை வைக்கும்முன் உப்பு போடுகிறார்களே! எதற்காக?**

**பதில்:** *கிறிஸ்தவர் என்று எழுதியிருக்கிறீர்கள். கிறிஸ்தவர்கள் அப்படி செய்யமாட்டார்களே! எகிப்து நாட்டில் அரச குடும்பத்தில் இறப்பவர்களின் உடல் கெடாமல் இருக்க சில இரசாயன கலவைகளை போட்டு வைப்பார்கள். ஆனால் கிறிஸ்தவர்கள் அப்படி உப்பு போட்டு அடக்கம் செய்வது தவறல்லவா? ஒரு பொருள் கெடாமல் இருக்க உப்பு உபயோகிப்பார்கள். ஊருக்காய் அப்படிதான் உப்பில் ஊறப்போடுவது கெட்டுப்போகாமல் இருப்பதற்காகத்தான். நீங்கள் குறிப்பிடும் கிறிஸ்தவர்கள் உண்மையான கிறிஸ்தவர்களாக இருக்க முடியாது. இனி உங்கள் குடும்பத்தில் யாராவது இறந்தால் உப்பு கண்டிப்பாக போடவேண்டும் என்று யாராவது கட்டாயப்படுத்தினால்கூடவே கொஞ்சம் கடுகு, கருவேப்பிலை ஆகியவைகளைபோட்டு தாளிப்பதைப்போல் தாளித்து பிணத்தின் மேல்போடச் சொல்லுங்கள். இதை நான் சொன்னதாக கூறுங்கள். இதையெல்லாம் ஆயர்கள் எப்படி அனுமதிக்கிறார்கள்?. அவர்களாவது இப்படிப்பட்ட சடங்குகள் புறமதத்தினர் செய்வார்கள். நாம் அவைகளை செய்யக்கூடாது என்று ஞாயிறு பிரசங்கத்திலாவது கூற சொல்லுங்கள். இது சம்பந்தமாக பல கடிதங்கள் பல காலங்களாக எனக்கு வந்துவிட்டது. இவர்களுக்கு விளக்கம் கூறி அறிவித்து பிரயோஜனமில்லை. ஜெபியுங்கள்.* ❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

# ஒரு ஆசை

**கேள்வி: நான் பல வருடமாக உங்கள் ஜாமக்காரன் பத்திரிக்கையின் வாசகன். எங்களுக்கு ஒரு ஆசை ஜாமக்காரன் பத்திரிக்கையின் அட்டையை மட்டுமாவது உயர்ந்த பாளிஷ் பேப்பர் அல்லது அட்டையில் பிரசூரித்தால் பார்ப்பதற்கு மிக அழகாக இருக்குமே? மற்ற எல்லா பத்திரிக்கைகளையும் பாருங்க, ஒரு பிரயோஜனமும் இல்லாத அப்படிப்பட்ட பத்திரிக்கைகளுக்கு எல்லா பக்கங்களும் பளப்பளப்பான மிக உயர்ந்த தரம்வாய்ந்த விலை அதிகமான பேப்பர் உபயோகிக்கிறார்கள். நீங்கள் மட்டும் சரி என்று ஒரு வார்த்தை கூறுங்கள். எத்தனை ஆயிரம் பிரதிகள் ஜாமக்காரன் அச்சடிக்கிறீர்களோ அதற்கான பணத்தை நாங்கள் மாதாமாதம் உங்களுக்கு அனுப்ப பொருப்பேற்கிறோம். தயவுசெய்து சரி என்று சொல்லுங்கள்?.**

**பதில்:** ஒரு பொருள் அழகுப்படுத்துவது என்பது ஒரு வியாபார யுக்தியாகும். மற்ற புத்தகத்தைவிட அட்டையின் முகப்பு அழகாக காணப்பட்டால் **கவர்ச்சி** அதிகமாகும். மற்ற புத்தகங்களைவிட கவர்ச்சியுள்ள புத்தகம் மிக அதிகம் விற்பனையாகும்.

நான் ஜாமக்காரன் வெளியிடுவது **பொது மக்கள் விலைக்கு வாங்குவதற்காக அல்ல**. புத்தக சந்தையில் **அதிகம் விற்பனையாகவேண்டும்** என்ற நோக்கத்தில் அல்லவே!. ஜாமக்காரனில் வெளியிடும் விஷயம் எப்படியாவது வாசகர்களுக்கு போய்சேர வேண்டும் என்பது மட்டுமே என் பாரம். ஜாமக்காரன் விற்பனைக்காக வைக்கப்படும் வியாபார பொருள் அல்ல. மற்ற பத்திரிக்கைகளுடன் போட்டியிட்டு அதிக எண்ணிக்கையில் வெளியிடவேண்டும் என்பதும் என் நோக்கம் அல்ல. ஜாமக்காரன் என் சொந்த பணத்தை செலவழித்து வெளியிடும் பத்திரிக்கையும் அல்ல. என் அன்பு வாசகர்கள் அனைவரும் தங்கள் சொந்த பணத்தை மாதமாதம் எனக்கு அனுப்பி பணம் செலவழித்து பத்திரிக்கை வெளியிடும் செலவை பொறுப்பேற்று இத்தனை வருடங்களாக கடன் இல்லாமல் நடத்தி வருகிறார்கள். ஜாமக்காரனை லட்சக்கணக்கான மக்கள் வாசிக்கிறார்கள். கம்பியூட்டர் வழியாக இன்டர்நெட், வெப்சைட் வழியாக பல லட்சம் மக்கள் ஜாமக்காரனை வாசிக்கிறதாக வெப் சென்டர் நடத்துபவர்கள் கூறக் கேட்டு தேவனைத் துதித்தேன்.

அதே சமயம் பத்திரிக்கை நடத்து மற்ற ஊழியர்கள் **விலை உயர்ந்த பேப்பரில்** அவர்கள் பத்திரிக்கையை வெளியிடும் நோக்கத்தையும் நான் குறை சொல்ல முடியாது.

மறைந்த சகோ.**DGS.தினகரன்** அவர்கள் மேட்டூர் SBI பேங்க் கிளை மேனேஜராக பணியாற்றும் போதுதான் **இயேசு அழைக்கிறார்** வானொலி நிகழ்ச்சியை ஆரம்பிக்க நான் காரணமானேன். அவருக்கு முன்பதாகவே நான் வானொலியில் பிரசங்கித்துக்கொண்டிருந்த காலம் அது. சகோ.**தினகரன்** அவர்களும் வானொலியில் பேச ஆசைப்பட்டார் பெங்களூர் FEBA வானொலி நிலைய பொருப்பாளர் களிடம் கூறி அதற்கான ஏற்பாடுகளை செய்தேன்.

அப்போது **சகோ.வீரராஜ்** அவர்கள்(இப்போது அமெரிக்காவில் சபை ஆயராக இருக்கிறார்) ரெக்கார்டிங் பதிவாளராக இருந்தார். இப்போது திருச்சியில் பெந்தேகோஸ்தே சபை பாஸ்டராக இருக்கும் பாஸ்டர்.**விக்டர்ஞானராஜ்** அவர்கள் அக்காலத்தில் FEBA **வானொலி** அலுவலகத்தில் **மக்கள் தொடர்பு** அதிகாரியாக பணியாற்றிக்கொண்டிருந்தார். சகோ.தினகரனும்,நானும் அங்குள்ள சிறு விருந்தினர் அறையில் தங்கி சகோ.தினகரன் பேசும் 6 மாதத்திற்கான செய்திகளை ஒரே நாளில் FEBAவில் பதிவு செய்யப்பட்டது. ஆனால் **சகோ.தினகரனின்** வானொலி நிகழ்ச்சிக்கு பெயரிடப்படாமல் இருந்தது. **ஸ்தாபனம்** ஆரம்பிப்பதோ - **சபை** ஆரம்பிப்பதோ **சகோ.தினகரன்** அவர்கள் விருப்பப்படாத நல்ல ஆரம்ப காலம் அது.

அந்த காலங்களில் **சகோ.தினகரனுக்கு** சொந்தமாக பத்திரிக்கை இல்லை. பெங்களூர் கண்டோன்மென்டில் சபை நடத்திவந்த பெந்தேகோஸ்தே சபை பாஸ்டர்.**கே.ஆர்.பால்** அவர்கள்தான் **சகோ.தினகரன்** அவர்களை தன் பொது கூட்ட நிகழ்ச்சிகளில் பேசவைத்து பொதுமக்களுக்கு அறிமுகப்படுத்திய காலம் அது. பாஸ்டர்.**கே.ஆர்.பால்** அவர்கள் சொந்தமாக அன்று நடத்தி வந்த **லிவ்விங் ஸ்டார்** என்ற பெயருள்ள பத்திரிக்கையில் சகோ.தினகரன் அவர்கள் ஒவ்வொரு மாதமும் பிரசங்க செய்திகளை சில பக்கங்கள் எழுதி வந்தார். அது ஜனங்களிடம் நல்ல வரவேற்பைப்பெற்றது.

ஆனால் சில உபதேச பிரச்சனைகளால் சகோ.தினகரன் அவர்களால் சுதந்திரமாக தன் கருத்தை அந்த பத்திரிக்கையில் வெளியிடமுடியாமல் சில **மனஸ்தாபங்கள் பாஸ்டருக்கும், அவருக்கும்** ஏற்பட்டது. அப்போதுதான் ஏன் நாமே சொந்தமாக ஒரு பத்திரிக்கை தொடங்கக்கூடாது என்ற தன் ஆசையை என்னிடம் பகிர்ந்துக்கொண்டார்.

அந்த சூழ்நிலையில்தான் FEBA வானொலியில் பேசி ஒலிப்பரப்ப தயாராக இருந்த சகோ.தினகரனின் பிரசங்க நிகழ்ச்சிக்கு **பெயர் வைக்கவேண்டிய கட்டாயத்துக்குள்ளாக்கப் பட்டார்.** அப்போது ஈரோடு நகரில் பிரப்மெமோரியல் CSI சபையினர் என்னையும், சகோ.தினகரனையும் குழுவினரையும் அழைத்து ஒரு பெரிய கூட்டத்தை ஈரோடு CSI ஆஸ்பத்திரி மைதானத்தில் நடத்தினர். அந்த கூட்டத்தை பெரிய அளவில் மேடை அமைத்து ஏற்பாடு செய்திருந்தனர்.

முதல்நாள் கூட்டம் ஆரம்பமானது. மேடையில் சகோ.**லைனல்**,சகோ.**பென்னி** (இப்போது அவர் பாஸ்டர். **பென்னி,** அன்று கோவை PSG கல்லூரி விரிவுரையாளராக பணியாற்றியனார்) அவர்களோடு சகோ.எட்வார்ட் பால் அவர்களும், குடும்பமாக பாடல்வேளையில் பாடல்களை நடத்திக்கொண்டிருந்தனர். அவ்வேளையில் நான் மேடையில் அமர்ந்திருக்கும்போது சகோ.தினகரனிடம் FEBA நிலையத்தினர் வானொலி பிரசங்க நிகழ்ச்சிக்கு பெயர் கேட்டு கடைசி எச்சரிக்கையாக கடிதம் அனுப்பியுள்ளனர். ஆகவே இனி தாமதிக்கக்கூடாது என்றேன். சகோ.தினகரனோ அமைதியாக அமர்ந்திருந்தார். மேடையில் **நான்** என் அருகே சகோ.**தினகரன்,** சகோதரர் அருகே மறைந்த Rev.எபிநேசர் ஆயர் அவர்களும் அமர்ந்திருந்தோம். பின்னால் ஈரோடு நகர முக்கிய பிரமுகர்களும், ஊழியர்களும் அமர்ந்திருந்தனர். சகோதரி.**ஸ்டெல்லாதினகரன்** அவர்களும் பின்னால் உட்கார்ந்திருந்தார். சகோ.தினகரனின் கூர்மையான கண்கள் அவர் மேடைஏறி நாற்காலியில் அமரும்போதே அந்த மேடை அலங்காரத்தை கவனித்திருந்தது. அப்போதுதான் அந்த **சரித்திர நிகழ்ச்சி** நடந்தது.



**ஈரோடு பிரப் CSI சபை கன்வென்ஷன் கமிட்டி இட்ட இயேசு அழைக்கிறார் பெயர் பின் திரையில் பார்க்கலாம்.**

திடீரென்று சகோ.தினகரன் என்னிடமாய் திரும்பி டாக்டர் மேடையின் பின்னால் கவனித்தீர்களா?. பிரப் CSI சபையினர் நீல நிறத்தில் பெரிய திரை சீலை தொங்கவிட்டிருந்தனர். அதில் அவர்களால் எழுதப்பட்ட அந்த வாசகத்தை வாசியுங்கள் என்றார். அதில் **இயேசு அழைக்கிறார்** என்று பெரிய எழுத்தில் எழுதியிருந்தனர். அந்த பெயரை நம் வானொலி நிகழ்ச்சிக்கு வைத்தால் என்ன? என்றார். உடனே நான் அது மிகநல்ல பெயர் தான் அந்த பெயரையே வானொலிநிகழ்ச்சிக்கும்,நீங்கள் சொந்தமாக ஆரம்பிக்க ஆசைப்படும் பத்திரிக்கைக்கும்வைத்தால் மிகபொருத்தமாக இருக்கும் என்றேன். உடனே சகோ.தினகரன் என் கையை பிடித்து மேஜைமீது வைத்து, தன் கையை என் கையின்மேல் வைத்து, **பிதா,குமாரன், பரிசுத்தஆவியின்** நாமத்தில் **இயேசு அழைக்கிறார்** என்ற இந்த பெயரை கர்த்தாவே பிரதிஷ்டை செய்கிறோம். இந்த பெயரின் மூலம் எங்கள் எல்லாவித ஊழியங்களும் நடைபெற்று **உம் நாமம் மகிமைப்படுவதாக. ஆமென்** என்று கூறி ஜெபித்து முடித்தார். நாங்கள் ஜெபித்தது அருகில் அமர்ந்திருந்த ஆயர் எபிநேசர் அவர்களுக்கும் தெரியாது. பின்னால் அமர்ந்திருந்த சகோதரி.**ஸ்டெல்லா தினகரன்** அவர்களுக்கும் தெரியாது. இப்படித் தான் முதன் முதலாக **இயேசு அழைக்கிறார்** என்ற **உலக பிரசித்திப்பெற்ற**


**நானும்- சகோ.DGS. தினகரனும் இதே மேடையில்தான் இயேசு அழைக்கிறார் பெயரை பிரதிஷ்டை செய்தோம்.**

பெயரும் உருவானது. ஊழியரும் உருவானார். இதை ஏன் இங்கு குறிப்பிட்டேன் என்றால் இந்த நிகழ்ச்சிக்கு பிறகு சகோதரி.**ஸ்டெல்லாதினகரன்** அவர்களை பத்திரிக்கை ஆசிரியராக வைத்து **இயேசு அழைக்கிறார்** என்ற பத்திரிக்கை அரசாங்க பதிவு பெற்றது. சகோ.தினகரன் அவர்கள் அரசாங்க வங்கி அதிகாரியாக இருந்ததால் அவர் பத்திரிக்கை ஆசிரியராக இயங்கக்கூடாது. அதனால் சகோதரி.ஸ்டெல்லா தினகரனை பத்திரிக்கை ஆசிரியராக ஆக்கினார். அன்று பத்திரிக்கை வெளியிடும்போது பணத்தேவை மிக அதிகமாக இருந்தது. சகோ.தினகரனின் ஊழியம் பிரசித்திபடாத காலம் அது. காணிக்கை வரவுகள் இல்லை. அப்போது நான் கூறினேன் சாதாரண விலைக்குறைந்த பேப்பரில் **இயேசு அழைக்கிறார்** பத்திரிக்கையை வெளியிடுவோம் என்றேன். அப்போது அன்று அவர் கூறியதாவது. பிரதர் ஒரு சினிமா விளம்பர நோட்டீஸ்ஸை விலை உயர்ந்த பேப்பரில் அச்சிட்டு விநியோகித்து அதை பார்த்தவர்கள் அதை பார்த்தப்பின் கீழே வீசிவிடுகிறார்கள். ஆனால் நம் பத்திரிக்கை **விலை மதிப்பில்லாத** வேத வசனத்தை சுமந்து வரும்போது அதை விலைக்குறைந்த **சாதராண பேப்பரில்** அச்சிட எனக்கு விருப்பமில்லை. பணம் எப்படியும் கர்த்தர் அனுப்ப ஏற்பாடு செய்வார். ஆரம்பத்திலேயே விலை உயர்ந்த பேப்பரில் **இயேசு அழைக்கிறார்** பத்திரிக்கையை வெளியிடுவோம் என்றார். அன்று தினகரன் கூறியதின் நோக்கமும் அவரின் விளக்கமும் என்னால் மறக்கமுடியாத வார்த்தையாக அமைந்தது. **வேத வசனத்துக்கு** அந்த காலத்தில் அவர் கொடுத்த மதிப்பு மிக அதிகம். ஆகவே **விலை உயர்ந்த பேப்பரில்** பத்திரிக்கை வெளியிடவேண்டும் என்ற அவர் கருத்தும் அவரின் நிலையில் ஏற்கப்படவேண்டியதே!.



ஜெபத்தில் பெயர் அழைக்கும் தொழில் நுணுக்கத்தை சகோ. தினகரன் அவர்கள் அமெரிக்கா டிவி ஊழியர்.பென்ஹின் அவர்களிடமிருந்து கற்றதாகும்.

இந்த மறக்கமுடியாத நல்ல நிகழ்ச்சிகள் **சகோதரன்** அவர்கள் **காருண்யா கல்லூரியை** ஆரம்பிக்காத காலத்துக்குமுன் உண்மையான ஊழியக்காரனாக ஊழியம் ஆரம்பித்த சகோ.தினகரனின் அந்த ஆரம்ப கால கட்டத்தில் நடந்த நிகழ்வுகளாகும். இதற்கு பிறகு அவருக்கு **பணம் பெருக ஆரம்பித்தப்பின், காணிக்கைகள்பெருக ஆரம்பித்த**பின் சகோ.தினகரன் வசன உபதேசத்தை விட்டு விலகி அமெரிக்க ஊழியர்கள் **பிரன்ஹாம்,கேத்தரின் குல்மார், பெனிஹின்** போன்றோரின் பொய் வெளிப்பாடு ஊழியத்தில் கவரப்பட்டு அவர்களின் ஊழியவழியை பின்பற்றி கர்த்தரின் வசனத்தை விட்டு வெகுதூரம் விலகிப்போனார்.

அந்த காலத்தில் ஒன்றாக பல இடங்களில் ஊழியம் செய்த சகோ.தினகரனுடன் சேர்த்து மொத்தம் 5 நபர்களில் நாங்கள் நான்குபேர்கள் மட்டும் ஒன்றாக ஒரே சமயத்தில் அவரை விட்டுவிலகி **சுத்த சுவிசேஷம்** அறிவிக்கும் ஊழியத்தில் நாங்கள் நான்கு பேரும் உறுதியாக நின்று, இப்போதும் ஊழியம் செய்துகொண்டு இருக்கிறோம். விலைக்கூடிய பேப்பரில், விலை குறைந்த பேப்பரில் பத்திரிக்கை வெளியிடும் விஷயத்தைக்குறித்து அறிவிக்கும் இவ்வேளையில் வாசகர்களுக்காக மறைக்கப்பட்ட பழைய ஆரம்ப கால நிகழ்வுகளை அறிவிப்பது அவசியமானது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

# சாம்பல் புதன்

**கேள்வி:** 2015 ஏப்ரல் மாதம் சாம்பல் புதன்கிழமை என்ற பெயரில் 40 நாட்கள் தபசுகால(லென்டன் டேய்ஸ்) ஆராதனைகள் நம் சபைகளில் நடத்தப்படுகிறேதே!.

**40 நாட்கள் என்ற இந்த ஒடுக்க நாட்களின் ஆரம்பநாளை ஏன் சாம்பல் என்ற வார்த்தையை சபையில் உபயோகிக்கின்றனர்?.**

**பதில்:** *இது* ***எபிஸ்கோப்பல்*** *சபையில்*(Mainline Church) *மட்டும்தான் இந்த 40 நாட்கள் அனுஷ்டிக்கப்படுகிறது. அதாவது* ***கத்தோலிக்க,CSI,லூத்தரன்,மார்தோமா,யாக்கோபையா*** *சபையினர் மட்டும்தான் இதை அனுஷ்டிக்கிறார்கள். இது* ***வேதத்தில் குறிப்பிடாத உபதேசமாகும்.*** *ஆரம்பகால புதிய ஏற்பாட்டு சபைகளில் கடைப்பிடிக்காத ஒரு பழக்கம் ஆகும். இந்த நாற்பது நாட்களில்* ***ஒருவேளை ஆகாரம்*** *சாப்பிடாது இருப்பது இந்த சடங்குகளில் ஒன்றாகும். அதை* ***ஒருசந்தி*** *என்று அழைப்பார்கள். இவைகளைக்குறித்து என் கூட்டங்களில் பல இடத்தில் பிரசங்கித்து இருக்கிறேன்.*

***சாம்பல்*** *என்ற வார்த்தை வேதத்திலிருந்து எடுத்து உபயோகப்படுத்தப்பட்டதாகும்.* ***சாம்பல்*** *பழைய ஏற்பாட்டு காலத்தில் இஸ்ரவேல் மக்கள் பாவம் செய்து பாளையத்திலிருந்து அவர்களை ஒதுக்கிவிட்டபின் அவர்கள் மனந்திருந்தி மறுபடியும் பாளைத்துக்குள் அல்லது சபைக்குள் சேர்க்க சாம்பலை தண்ணீரில் கரைத்து அவர்கள்மேல் தெளிக்கும் சடங்காக உபயோகித்தார்கள். எண் 19:17ல்* ***மனந்திருந்தியவனை*** *தீட்டை நீக்க அவனை சுத்திகரிக்க பலபீடத்தின் அருகே அவனை நிற்க வைத்து பலிபீடத்திலிருந்து சாம்பலை எடுத்து தண்ணீரில் கரைத்து அதை அவன்மேல் தெளித்து பாவம் சுத்திகரிக்கப்பட்டது என்று கூறி தீட்டு நீங்கியவனாக மறுபடியும் பாளைத்தில் அவனை சேர்த்துக்கொள்வார்கள்.*

*இதே கருத்தை,* ***நிகழ்ச்சியை*** *ஒப்பிட்டு எபிரேய நிரூபத்தை எழுதியவர் எபி 9:13ம் வசனத்தில்* ***சாம்பல்*** *சுத்திகரிக்க உபயோகப்படுத்தப்பட்டதைப்போல் என்று குறிப்பிட்டு எழுதுகிறார். இதை* ***கான்ஸ்டன்டைன்*** *ராஜா காலத்துக்குபின் சபைகளில் 40 நாட்களை ஒடுக்க நாட்களாக அறிமுகப்படுத்தபட்டு அதன் ஆரம்ப நாளான புதன்கிழமையை சுத்திகரிக்கும் ஆரம்ப நாளாக குறிப்பிட* ***சாம்பல் புதன்கிழமை*** *என்று அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த நாட்களில் சபை மக்கள் தங்களை ஆராய்ந்து தங்களை சுத்திகரித்துக்கொள்ளவேண்டும் என்று அன்றைய சபையின் சடங்காக கத்தோலிக்க சபையிலும் தொடரப்பட்டு இப்போது பிராட்டஸ்ட்ன்ட் சபைகளிலும் தொடருகிறது. இதை மற்ற ஆவிக்குரிய சபைகளில் பின்பற்றுவதில்லை. பெயர் கிறிஸ்தவனாக இருப்பவர்கள் இந்த 40 நாட்களில் தங்களை பரிசோதித்து தவறை சரிப்படுத்தி வாழ பிராட்டஸ்ன்ட் சபை மக்கள் 40 நாட்களை ஒடுக்க நாட்களாக அனுஷ்டிப்பதில் பிழையேதுமில்லை.*

*சரியான உண்மை கிறிஸ்தவன் எந்த சபையை சேர்ந்தவனாக இருந்தாலும் ஒவ்வொரு நாளும் தன்னை பரிசோதித்து ஆராய்ந்து பார்த்து சுத்திகரித்துக்கொள்ளவேண்டியது மிக அவசியம்.* ***சாம்பல் புதன்கிழமைக்காகவோ, 40 நாட்கள் தபசு கால நாட்களுக்காகவோ*** *காத்திருக்கக்கூடாது. ஒவ்வொரு நாளும் அதாவது தன் மரணம்நாள் வரை தற்பரிசோதனைசெய்து தன்னை சுத்திகரித்துக் கொள்வது மிக அவசியம். ஆவிக்குரிய சபைகளுக்கு இந்த சாம்பல் - 40 நாள் தபசு காலம் என்பது கிடையாது. இதுதான்* ***சாம்பல் புதனின்*** *விளக்கம்.*

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

# அப்போஸ்தலர் யார்?

**கேள்வி: கடந்த மாதம் 20ம் தேதி வெளிவந்த தினசரி பத்திரிக்கைகளில் சகோ.தினகரன் அவர்கள் புகைப்படத்தை வெளியிட்டு அவரின் 7ம் ஆண்டு மரண நாளை நினைவு கூறுகிறோம் என்று மனைவி, மகன்,குடும்பத்தினர் இயேசு அழைக்கிறார் சார்பில் வெளியிட்ட மரண அஞ்சலியில் சகோ.தினகரன் அவர்களின்**

**படத்தின்கீழ் அப்போஸ்தலன் DGS.தினகரன் என்று குறிப்பிட்டுள்ளார்கள். அப்போஸ்தலன் யார் என்பதைப்பற்றி உங்கள் பிரசங்கத்தை கேட்டவன் நான். வசனத்தின்படி நீங்கள்பேசியது மிகவும் சரி. ஆனால் சகோ.தினகரன் குடும்பத்தாருக்கு வேத வசன ஞானம் இல்லையா,? வசனம் அவர்களுக்கு தெரியாதா?**

**பதில்:** *வசனம் அவர்களுக்கு தெரியுமா? தெரியதா? என்பதை நீங்களே நிதானித்துக்கொள்ளுங்கள்.*

*வெளி 21:14ல்* ***பன்னிரெண்டு*** *அஸ்திபாரக் கற்களிருந்தன. அவைகள் மேல் ஆட்டுக்குட்டியானவரின் (இயேசுகிறிஸ்துவின்)* ***பன்னிரெண்டு அப்போஸ்தலர்களின்*** *நாமங்கள் பதிந்திருந்தன என்று வாசிக்கிறோம். வெளிப்படுத்தலில் பன்னிரெண்டு* ***அஸ்திபாரக் கற்கள்*** *என்று கூறப்படுவது புதிய ஏற்பாட்டு சபையின் அஸ்திபார உபதேசங்கள் யாவும்* ***பன்னிரெண்டு சீஷர்களால்*** *உபதேசிக்கப்பட்டவை அல்லது* ***கைக்கொள்ளப்பட்டவை*** *எபி 6:1,2ல் அதை காணலாம். அப் 2:42லும் காணலாம்.*

***இயேசுகிறிஸ்துவால்*** *நேரிடையாக தெரிந்தெடுக்கப்பட்டவர்கள்தான்* ***அப்போஸ்தலர்கள்*** *என்று அழைக்கப்பட தகுதிபெற்றவர்கள். மற்றவர்கள் யாவரும் சீஷர்கள் என்று அழைக்கப்பட்டார்கள்.* ***பர்னபா*** *போன்றவரை அன்றைய சபையினர்* ***அப்போஸ்தலன்*** *என்று பேச்சு வழியில் கூறினார்கள்.* ***அப்போஸ்தலோஸ்*** *என்ற கிரேக்க பாஷையின் வார்த்தைக்கு* ***அனுப்பப்பட்டவன்*** *என்று அர்த்தம் அப்போஸ்தலன் என்றால் பொதுஅர்த்தம்* ***அனுப்பப்பட்டவன்*** *என்பதாகும். யாரால் அனுப்பப்பட்டவன் இயேசுகிறிஸ்துவால் அனுப்பப்பட்டவன். பொதுவாக எல்லா* ***ஊழியர்களும் மிஷனரிகளும்*** *இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகளை கேட்டு இயேசுவை ஏற்றுக்கொண்டு இயேசுவை இரட்சகர் என்று அறிவிக்க* ***சபை மக்களால்*** *அவர்கள் இயேசுவின் நாமத்தில் அனுப்பப்பட்டவர்கள் அல்லது மிஷனரி ஸ்தாபனத்தால் அனுப்பப்பட்டவர்கள் ஆகும். ஆனால்* ***அப்போஸ்தலன்*** *என்பதற்கு பொதுவாக அனுப்பப்பட்டவர் என்ற அர்த்தம் இருந்தாலும், இயேசுகிறிஸ்துவால் நேரிடையாக தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் மட்டும்தான்* ***அப்போஸ்தலர்*** *என்று அழைக்கப்பட அங்கீகாரம் பெற்றவர்களாகும்.*

*‘* ***தற்கொலை*** *செய்துகொண்ட 12 அப்போஸ்தலர்களில் ஒருவனாகிய* ***யூதாஸ்காரியூத்துக்கு*** *பதிலாக இரண்டு பெயர்களை இரண்டு சீட்டுகளில் எழுதி சீட்டு குலுக்கி போட்டு* ***மத்தியாஸ்*** *என்பவனை அப்போஸ்தலனாக 11 சீஷர்கள் தெரிந்தெடுத்தனர். தெரிந்தெடுக்கப்பட்ட* ***மத்தியாஸ்*** *இயேசுகிறிஸ்துவால் தெரிந்ததெடுக்கப்பட்டவன் அல்ல. அதனால்தான் அவன் பெயர் வேதத்தில் வேறு எங்கும் எழுதப்படவில்லை. தேவன் அந்த தெரிந்தெடுப்பை விரும்பவில்லை.*

*உதாரணமாக சொத்து பிரிக்க பிரச்சனை வந்தால், இரண்டு பிள்ளைகள் ஒரே மாதிரி மதிப்பெண்களை வாங்கியிருந்தால் முதல் பரிசு யாருக்கு என்பதை முடிவெடுக்க இருவர் பெயரை எழுதி குலுக்கு சீட்டுபோட்டு, சீட்டு யார் பெயரில் விழுந்ததோ அவருக்கு முதல் பரிசை கொடுப்பார்கள்.* ***சீட்டுபோடுதல் உக்கிரகத்தை தணிக்கும்*** *என்று நீதிமொழிகளில் வாசிக்கலாம். ஆனால் அப்போஸ்தல ஊழியத்துக்கு அப்படி குலுக்கு சீட்டுபோட்டு ஒரு ஆளை தெரிந்தெடுக்கக் கூடாது. அதனால்தான் குலுக்கு சீட்டில் பெயர் வந்த* ***மத்தியாஸ்*** *என்பவன் எந்த அற்புதங்களும் செய்ததாகவோ? நிருபங்கள் எழுதியதாகவோ நாம் வேதத்தில் காண்பதில்லை.*

*இயேசுகிறிஸ்வின் சபைமக்களை கொன்றவனாகிய* ***சவுல்*** *என்பவனை இயேசுகிறிஸ்து தனது* ***சீஷனாகவும், அப்போஸ்தலனாகவும்*** *தெரிந்துக்கொண்டார். அதனால்* ***பவுலும்*** *தன்னை அப்போஸ்தலனாக* ***கர்த்தர்*** *தெரிந்துக்கொண்டார் என்று நிருபங்களில் குறிப்பிட்டு எழுதுகிறார்.* ***சவுல்*** *என்ற* ***பவுல்*** *இயேசுகிறிஸ்துவை நேருக்குநேர் கண்டவர் இல்லை. ஆகவே இயேசுகிறிஸ்து தன்னை பவுலுக்கு நேருக்குநேர் வெளிப்படுத்தவும் தான்* ***பிறந்தது,வளர்ந்தது, ஊழியம் செய்தது, அற்புதங்களை நிகழ்த்தியது, தான் நடத்திய திருவிருந்து நிகழ்ச்சிகளையும், சிலுவையின்***

***மரணத்தையும்*** நேரில் காண்பதுபோல் பவுலுக்கு காண்பிக்க, ஆவியில் பவுலை அழைத்து சென்று மேலே குறிப்பிட்ட அத்தனை நிகழ்வுகளையும் காண்பித்து, தன்னையும் பவுலுக்கு வெளிப்படுத்த **பவுலை அரேபியா பாலைவனத்துக்கு** அழைத்து சென்று **மூன்று வருடங்கள்** அங்கு தங்கவைத்து தன்னைப்பற்றிய முழுகாட்சிகளையும் காட்டி பவுலை அப்போஸ்தல ஊழியத்துக்கு தகுதியாக்கினார்.

' ***அப்போஸ்தலரின்*** சரித்திரத்தில் 6ம் அதிகாரத்தில் விதவைகள் விவகாரம் மற்றும் உள்ள சமூக பிரச்சனைகளையும் நியாயம் செய்ய அல்லது விசாரிக்க அன்றைய சபை மக்கள் 12 அப்போஸ்தலர்களையும் எருசலேமுக்கு வரவழைத்து பேசினார்கள். அதற்கு **அப்போஸ்தலர்கள்** நாங்கள் ஜெபம் பண்ணுவதிலும் தேவ வசனத்தைப் போதிக்கிறதிலும் ஊழியத்திலும் இடைவெளி யில்லாமல் **தரித்திருப்போம் அதுதான் எங்கள்** ஊழியம். ஆகவே இப்படிப்பட்ட **சமூக சேவைக்கு** சபை பிரச்சனைகளை விசாரணை நடத்த எங்களை அழைக்காதீர்கள் என்று கூறி அவர்களே சபைக்குள் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டவர்களை தெரிந்தெடுத்து அவர்கள்மேல் கைகளை வைத்து **சபை பொருப்பாளர்களாக** நியமித்தார்கள்.(அப் 6:3).

ஆனால் ***சகோ.தினகரன்*** அவர்களோ ***காருண்யா கல்லூரி,*** இஞ்சினியரிங் காலேஜ், ***காருண்யா யுனிவர்சிட்டி*** என்று நல்ல வருமானமுள்ள தொழில் ஆரம்பித்து **தொழிலதிபராக** மாறிப்போனர். தேவனில் ஊழிய அழைப்பிலிருந்தும் அவர் விலகினார். காருண்யா கல்லூரி மகனுக்காக ஆரம்பிக்கப்பட்ட தொழில். அதனால்தான் மகன்.பால்தினகரன் அவர்களை வேதாகம கல்லூரி அனுப்பாமல் பிஸினஸ் மேனேஜ்மெண்ட்(MBA) பட்டபடிப்பை படிக்க வைத்தார்.

***சகோ.தினகரனின்*** அன்றைய ஊழிய நண்பர்களாகிய நாங்கள் நான்குபேர் காருண்யா ஆரம்பிக்க வேண்டாம் என்று எவ்வளவோ திட்டமாக சகோ.தினகரனுக்கு எடுத்துக் கூறினோம். தேவன் நம்மை ஊழியத்துக்கு மட்டுமே அழைத்திருக்கிறார். கல்லூரியை ஆரம்பித்து பணம் சம்பாதிக்க அல்ல என்றோம். அவரோ கேட்கவில்லை.

***காருண்யா கல்லூரி*** ஏழைகளுக்காக மட்டும் ஆரம்பிக்கப்பட்ட கல்லூரி என்று மேடைக்கு மேடை **துணிந்து பொய்** கூறினார். கல்லூரியில் எத்தனை லட்சம் வாங்குகிறார்கள் என்று இப்போதுதான் எல்லாரும் புரிந்துகொண்டார்கள்.

**தேவனின் கோபம்** அவர்மேல் மூண்டது. எச்சரிப்பாக கர்த்தர் தன் இரண்டாம் ஆயுதத்தை கையில் எடுத்ததார்.

அதனால் சகோதரன் **தினகரன்** அவர்கள் மிகவும் நேசித்த **அன்பு மகள்.ஏஞ்சலை** கார் விபத்தில் அடிப்பட்டு அகோர மரணத்தில் மரிக்க அனுமதித்தார்.



**பாஸ்டர்.சுந்தரம்**

***மரித்த பாஸ்டர்.சுந்தரம்*** அவர்களும் சகோ.தினகரன் வீட்டுக்கு நேரில் சென்று மகளின் மரணம் தம்பி! உன்னை எச்சரிப்பதற்காகத்தான் கர்த்தரால் நிகழ்த்தப் பட்டது. நீ **ஊழியம் மட்டும்** செய்.

கர்த்தர் உனக்கு கொடுத்தது போன்ற **ஆறுதல்** அளிக்கும் பிரசங்க தாலந்தை வேறு யாரும் பெறவில்லை.

அந்த ஊழியத்தைமட்டும் நிறைவேற்று என்று துணிந்து கூறிவிட்டு வந்துவிட்டார்.

***பாஸ்டர்.சுந்தரம்*** அவர்கள் சகோ.தினகரன் வீட்டுக்கு எச்சரிக்கவும், ஆறுதல் கூறவும் போகபோவதாக அவர் புறப்படுவதற்கு 3 நாட்களுக்கு முன் நான் நேரில் சந்தித்தபோது கூறினார்.

***பாஸ்டர்.சுந்தரம்*** அவர்கள் அந்த நாட்களில் சில விவரங்களைக் குறித்து எனக்கு **கைப்பட** எழுதிய **கடிதம் இப்போதும்** என்னிடம் உண்டு.

கடிதம் எழுதிய மூன்றாவது நாள் **ஜாமக்காரனில்** அக்கடித விவரத்தை வெளியிட்டுவிட வேண்டாம் என்ற கடிதம் எனக்கு வந்தது. ஆனால் அக்கடிதத்தின் கையெழுத்து **பாஸ்டர்.சுந்தரம்** அவர்களுடையதல்ல என்பது எனக்கு தெரியும்.

என் வாசகரும், ACA சபை அங்கத்தினருமான சகோ.**ராஜபூஷனம்** என்பவருக்கு இவ்விவரங்கள் அனைத்தும் தெரியும்.



**நானும், பாஸ்டர்.சுந்தரம் அவர்களும்**

சகோ.**தினகரன்** அவர்களை **காருண்யா கல்லூரியை** ஆரம்பிக்க கர்த்தர் அழைக்கவில்லை. **கவலைப்படுபவர்களுக்கு, வேதனையுற்றவர்களுக்கு, நம்பிக்கையற்றவர்களுக்கு ஆறுதல் அளிக்கும்** மிக உன்னத பிரசங்க தாலந்தை கர்த்தர் சகோ.**தினகரனுக்கு** அருளியிருந்தார். ஆனால் கர்த்தரின் அந்த நல்ல திட்டத்தை அவரே தகர்த்து விட்டார்.

இரு எஜமான்களுக்கு வேலை செய்ய சகோ.**தினகரன்** தீர்மானித்ததால் முக்கிய எஜமானனான **இயேசுகிறிஸ்து** அவரை விட்டு விலகினார். அதனால் பல பொய் தரிசனங்களை கூறவேண்டிய நிலை அவருக்கு ஏற்பட்டது.

' **அப்போஸ்தலன்** என்பவர் உலகவேலைகளில் சிக்கிக் கொள்ளமாட்டான். உலக பிரகாரமான வேலையை **அப்போஸ்தலன்** செய்யக்கூடாது. ஆகவே **சகோ.தினகரன்** அவர்களை **அப்போஸ்தலன்** என்று அழைப்பது நூற்றுக்குநூறு தவறு ஆகும். அப்படியே வேறு எந்த ஊழியக்காரன் தன்னை **அப்போஸ்தலன்** என்று அழைத்தாலும் அதுவும் **வேத வசனத்துக்கு** முரணாணதாகும். ஜாக்கிரதை!.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

## ஆலோசனை- ஜெபத்துக்கு தொடர்புக்கொள்பவர்கள் கவனிக்கவும்:

**ஒவ்வொரு மாதத்திலும்** வாரத்தில் **செவ்வாய்கிழமை** முதல் **புதன் மதியம் வரை** மட்டுமே நான் வீட்டில் **சேலத்தில் இருப்பேன்.**

ஆலோசனைக்கும்-ஜெபத்துக்கும் நேரில் **சேலம்** (தமிழ்நாட்டுக்கு) வர விரும்புகிறவர்கள், முன்பதாகவே நீங்கள் என்னை சந்திக்க விரும்பும் தேதிகளை கடிதத்தில் குறிப்பிட்டு எழுதி கேட்டு எங்களிடமிருந்து பதில் பெற்றப்பின் அல்லது போனில் தொடர்புகொண்டு சந்திக்கும் நாளை உறுதிப்படுத்திக்கொண்டு வரவும்.

தொலைப்பேசியில் ஆலோசனை பெறுகிறவர்கள் வேதவசன சந்தேகம் கேட்கிறவர்கள், ஜெப குறிப்புகளை பகிர்ந்துக்கொள்கிறவர்கள் காலை 8மணியிலிருந்து இரவு 11மணிவரை தொடர்புக் கொள்ளலாம்.


(**தினசரி** மதியம் 2 மணியிலிருந்து மாலை 5மணிவரை போனில் தொடர்புக்கொள்ள முயலவேண்டாம்.) குறிப்பிட்ட அந்த நேரம் நேரில் வருபவர்களுக்காக ஜெபிக்கும்நேரமாகும். மேலும் அது **நாங்கள் ஓய்வு** எடுக்கும் நேரமுமாகும்.

அந்த **3மணி நேரம் எங்கள் தொலைபேசியை ஆப் செய்து வைத்து விடுவோம்** என்பதை நீங்கள் அறிய விரும்புகிறேன்.

' வடஇந்திய ஊழியங்களுக்கு நான் சென்றால் **செவ்வாய்கிழமையில்** வீட்டில் இருக்கமாட்டேன் என்பதையும் அறியவும்.

# நாஸ்டர்டாமஸ் தீர்க்கதரிசனம்:

❖ ***நாஸ்டர்டாமஸ்*** *என்பவர் பிரான்ஸ் நாட்டில் 1503ல் வருடம் பிறந்தவர் படிப்பில் சிறந்தவர் பல்கலைகழகப்படிப்பை முடித்து மெடிக்கல் காலேஜில் படித்து 1525* ***டாக்டர்*** *பட்டத்துடன் வெளியே வந்தார். மருத்துவ துறையிலும், மிகச்சிறந்த மருத்துவராக விளங்கினார். பல்கலைகழகத்தில் படித்துக்கொண்டிருக்கும் போதுதான்* ***ஹிப்னாட்டிசம், ஜோதிடம்*** *சம்பந்தமான புத்தகங்களை படித்து ஆராய்ந்தார். அவரை மிகவும் கவர்ந்த புத்தகம்* Faeimo's- De Mysteries Aegyptorium *என்பதாகும். இதிலே* Face Reading, Hipnotisam, Prophecy Reserch *ஆகியவைக்குறித்து ஆராய்ச்சி செய்து அவைகளை பயிற்சிக்க தொடங்கினார்.* Alchemists *என்ற ஜோதிட கலையையும் படித்தறிந்தார்.* ***ஆவிகளுடன்*** *பேசுதல் ஆகியவற்றையும் படித்தறிந்தார். அதை நடைமுறையிலும் செயல்படுத்தி பார்த்தறிந்தார். இப்படிப்பட்ட ஆராய்ச்சிக்கு அவருக்கு பிசாசு மிகவும் உதவியாக இருந்தான். ஆகவே வரும் காரியங்களையும் பல வருடங்களுக்குபின் நடக்கப்போகும் காரியங்களையும் நாஸ்டர்டாம்ஸ் கூற ஆரம்பித்தார். அதை கேட்ட மக்கள் பெரிதாக அவைகளை மதிக்கவில்லை. அவைகளை நம்பவும் இல்லை.*




❖ *ஆனால் 1565ம் ஆண்டில் மூட்டுவியாதி ஏற்பட்டு வீட்டில் முடங்கிகிடந்து ஒருநாள் அவர் குறிப்பிட்ட வருடத்திலேயே மரித்துப்போனார். இவர் தன் வாழ்க்கைச் சரித்திரத்தையும், உலக தீர்க்கதரிசனங்களையும்* The Centuries *என்ற புத்தகத்தில் எழுதினார்.* The Centuries *என்றால் நூற்றாண்டு என்று அர்த்தம் அல்ல. இவர் எழுதிய புத்தகம் நான்கு வரி பாடல்களாக* (Ouatraims) *தொகுத்து நூறு நூறாக கொண்ட ஒரு தொகுப்பு* ***அல்லது செட் அது பாடல்*** *வடிவத்தில்* ***சில ரகசிய குறியீடுகள்*** *கொண்ட வார்த்தைகளாகவும், விடுகதை போன்ற புதிர்கள் நிறைந்த வார்த்தைகளாகவும் இருக்கிறது. பைத்தியக்காரர்போல் இவர் இப்படி எழுத காரணம், சாதாரணமானவர்கள் அவர் எழுதியதைப் படித்து சுய நலத்துக்காக உபயோகித்து விடக்கூடாது என்பதுதான் காரணம் என்று இவரே தெரிவித்ததாக கூறுகிறார்கள். இவர்* Les Prophecies De M.Michel Nosstradamus *என்ற நூலையும் எழுதினார். அது* The Centuries VIII-X *என்ற தொகுப்பாக பிற்காலத்தில் வெளியிடப்பட்டது. இதில் இந்த உலகம் முடியும் மட்டும் என்னவெல்லாம் நடைபெறும் என்ற தீர்க்கதரிசன விஷயங்களை எழுதியிருக்கிறார்.*

*அதில் முதல் மகா யுத்தம், இரண்டாம் மகா யுத்தம் இவைகளில் பயன்படுத்தப்படும் ஆயுதங்கள் எப்படியிருக்கும் என்பதை தெளிவாக எழுதியிருப்பது உலக மக்களை மிகவும் வியப்பில் ஆழ்த்தியது. அவர் எழுதியபடியே நடந்தது என்பதுதான் வியப்புக்கு காரணமாகும்.*




❖ ***நாஸ்டர்டம்ஸ்*** *எழுதிய புத்தகத்தில் உலக மக்களை மிகவும் வியப்பில் ஆக்கியது அமெரிக்க அதிபர்* ***கென்னடி சகோதரர்களின் மரணம், அப்துல்லா கொமெனி- மன்னர் ஷா அவர்களின் வெளியேற்றம்,ஹிட்லர்,முசோலினி ஆகியவர்களைப்பற்றியும் எழுதினார். ஆசியாவில் பூகம்பம், அரேபியாவின் எண்ணெய் கிணறுகள், இந்தியா - பாகிஸ்தான் போர், கப்பல்கள், விமானங்கள்***

**தானே கடலில் வீழ்ந்து மூழ்கும் விவரம்** இப்படி பல விவரங்கள் அவர் எழுதியது அப்படியே நிறைவேறின. இது எப்படி சாத்தியமாகும்?. நாஸ்டர்டம்ஸ் கடவுள் பக்தி இல்லாதவன். எந்த கடவுளையும் வணங்காதவன். ஆனால் இப்படிப்பட்ட தீர்க்கதரிசனம் எப்படி இவன் மூலம் உரைக்கப்பட்டது. இவன் எழுதியது அத்தனையும் நிறைவேறியது. இன்றளவும் உலக மதவாதிகளும், உலக ஞானிகளும் இவரைப்பற்றியும் இவர் கூறிய தீர்க்கதரிசனங்களும் எப்படி நடக்கிறது என்பதை குறித்தும் விளங்காமல் தவிக்கின்றனர்!.

❖ இப்போது இந்த **நாஸ்டர்டம்ஸ்** பற்றி நான் **ஜாமக்காரனில்** எழுத காரணம் என்ன? என்று உங்களில் பலர் யோசிக்கலாம்.

இவன் கிறிஸ்தவன் அல்ல, பக்திமானும் அல்ல, இந்த அற்புதங்கள் எதுவும் பரிசுத்த ஆவியினால் நடப்பதல்ல என்பது தெளிவு. அப்படியானால் வேறு **எந்த ஆவி** இப்படிப்பட்ட அற்புத வெளிப்பாடுகளை தீர்க்கதரிசனங்களை கூறுகிறது? அது **அசுத்த ஆவியேயன்றி** வேறென்ன?.

## மூன்றுவிதமான ஆவிகள்:

*1). பரிசுத்த ஆவியானவரின் கிரியை*

*2). பிசாசின் ஆவியின் கிரியை*

***3). மனித ஆவியின் கிரியை*** ஆகிய **மூன்று ஆவிகளில்** ஏதாவது ஒரு ஆவியின் கிரியைகள் இப்படிப்பட்ட **தீர்க்கதரிசனங்களை** வெளிப்படுத்த முடியும்?.

## பரிசுத்தாவியானவரின் தீர்க்கதரிசனம்:

நம் கிறிஸ்தவ வேதத்தில் வாசிக்கும் தீர்க்கதரிசனங்கள் **தானியேல்** முதல் **யோவான்** வரை கூறப்பட்ட தீர்க்கதரிசனங்களை நாம் அறிவோம். இவைகள் யாவும் பரிசுத்த ஆவியானவரால் அறிவிக்கப்பட்ட தீர்க்கதரிசனமாகும்.

‘ வேதத்தில் ஆவியானவரால் கூறப்பட்ட தீர்க்கதரிசனம் எல்லாம் **மனிதர்களை, ராஜாக்களை** எச்சரிப்பதற்காகவும்,குற்றங்களை சுட்டிக்காட்டவும் உரைக்கப்பட்ட தீர்க்கதரிசனங் களாகும். ஒன்றாவது **ஆறுதல் கூற** உரைக்கப்பட்ட தீர்க்கதரிசனமல்ல என்பதை கவனிக்கவும்.

இன்றைய கள்ள ஊழியர்கள்,பாஸ்டர்கள் யாவரும் குறிப்பாக நாலுமாவடி,ஆலன்பால்,தினகர குடும்பங்கள், **சகோ.தினகரன்** பயிற்சிவித்து கெடுத்த தீர்க்கதரிசன ஊழியர்களில் யாராவது கூட்டங்களில் குற்றம் செய்தவரின் பெயரை குறிப்பிட்டு சொல்லி தீர்க்கதரிசனமாக உரைத்தவர்கள் இவர்களில் யாராவது ஒருவரை காட்டமுடியுமா?. எயிட்ஸ் வியாதி சுகமானது என்று பெயரை குறிப்பிட்டு கூட்டத்தில் பகிரங்கமாக கூறிய அந்த தீர்க்கதரிசனமும் பொய்யானது. அவனுக்கு **எயிட்ஸ்** சுகமாகவில்லை. சர்க்கரை வியாதி சுகமாகவில்லை. ஆனால் இவர்களுக்கு ஏன் மக்களின் குற்றங்களை சுட்டிக்காட்டும் தைரியம் இல்லாதுபோயிற்று?. இவர்களை நாம் ஏன் **கள்ளதீர்க்கதரிசிகள்** என்று ஏன் பகிரங்கமாக கூறக்கூடாது?

**தீர்க்கதரிசனம்** என்றால் **கர்த்தரின் வார்த்தை. தீர்க்கதரிசி** என்றால் **கர்த்தரின் வார்த்தையை உரைக்கிறவன்** என்று அர்த்தம். இதை விசுவாசிகள் குறிப்பிட்ட ஊழியர்களுக்கு மூளையில் உரைப்பதுபோல் கூறுங்கள். திருந்துவார்களா என்று பார்க்கலாம்.

## மனுஷ ஆவியின் தீர்க்கதரிசனம்:

இன்றைய ஊழியர்கள் **சகோ.DGS.தினகரன்,பால்தினகரன், மோகன் சி.லாசரஸ், ஏஞ்சல் டிவி சாது செல்வராஜ், வின்சென்ட் செல்வகுமார், எசேக்கியல் பிரான்சிஸ், ஜான் சாலமோன்,ஜவஹர்சாமுவேல், கார் தொழிலதிபர் ஸ்டீபன்,** தமிழ்நாட்டில் இன்னும் நூற்றுக்கணக்கான **மனிதஆவி** தீர்க்கதரிசிகள் பெருகிவிட்டார்கள். சிங்கப்பூரில் டிவியில் தமிழ் **கிறிஸ்தவ செய்தி அளிக்கும் ஊழியர்கள், மலேசியா ஊழியர்கள்**. மேலும் **அமெரிக்காவில்**

உள்ளவர்களைப்பற்றி கூறவே வேண்டாம்!. **பெனிஹின்** முதல் எண்ணிக்கைக்கு அடங்கா **பொய் தீர்க்கதரிசிகள்** மிக ஏராளம். இவர்கள் அல்லாமல் ஒவ்வொரு **பெந்தேகோஸ்தே சபைகளிலும் அந்நியபாஷை** பேசும் நேரங்களில் ஏராளமான பொய் **தீர்க்கதரிசிகளாக அந்த சபை விசுவாசி களையும் பாஸ்டர்களையும் பார்க்கலாம். இவர்கள் கூறும் தீர்க்கதரிசனத்தில்** உரைக்காத விவரங்களே கிடையாது. புற்றீசல்போல தமிழ்நாட்டிலும் பொய் தீர்க்கதரிசிகள் பெருகிவிட்டனர். இதைத்தான் பழைய ஏற்பாட்டின் காலத்திலேயே நடந்ததாக வாசிக்கிறோம். எரே 14:14.

❖ ***அப்பொழுது கர்த்தர் என்னை நோக்கி தீர்க்கதரிசிகள் என் நாமத்தைக்கொண்டு பொய்யாய்த் தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறார்கள். நான் அவர்களை அனுப்பியதுமில்லை அவர்களுக்கு கற்பித்ததுமில்லை! அவர்களோடே பேசினதுமில்லை..... அவர்கள் தங்கள் இருதயத்தின் கபடத்தை உங்களுக்கு தீர்க்கதரிசனமாய்ச் சொல்லுகிறார்கள்.*** எரே 14:14.

❖ ***தங்கள் இருதயத்தில் இருக்கிறதையே எடுத்துத் தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவர்களோடே நீ சொல்ல வேண்டியது என்னவென்றால் ....... ஒன்றும் தரிசியாதிருந்தும் தங்களுடைய ஆவியின் ஏவுதலைப் பின்பற்றுகிற மதிகெட்ட தீர்க்கதரிசிகளுக்கு ஐயோ!.***

❖ ***நான் உரைக்காதிருந்தும், நீங்கள் கர்த்தர் உரைத்தார் என்று சொல்லும் போது.... பொய்க் குறியைச் சொல்லுகிறீர்கள். ஆகையால் நான் உங்களுக்கு விரோதமானவர்*** என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்கிறார். எசே 13:2,3,7. மேலே பெயர்கள் குறிப்பிட்ட ஊழியர்கள் இவர்களோ இன்னும் பல பொய் தீர்க்கதரிசிகளுக்கு கர்த்தர் விரோதமானவர் என்று கர்த்தர் குறிப்பிடுகிறார்.

மேலே கூறப்பட்ட **பொய் தீர்க்கதரிசனம்** கூறும் நபர்கள் பழைய ஏற்பாட்டின் காலத்திலேயே இருந்தார்கள். ஜனங்களிடம் கர்த்தர் தன்னிடம் சொன்னார் என்று சொல்லி ஏமாற்றினார்கள். இன்றும் அதே தான் நடக்கிறது.

❖ ***தங்களுடைய ஆவியின் ஏவுதலை பின்பற்றுகிறார்கள்*** என்று மேலே காணப்பட்ட வசனத்தில் குறிப்பிடுவதுதான் **மனுஷ ஆவி என்பது ஆகும்.**

❖ ***ஜெபத்தில் பெயர் அழைக்கிறார்களே*** இவர்களெல்லாருமே **மனுஷ ஆவியினால்** ஜெபத்தில் ஆட்களின் பெயரையும், வியாதியின் பெயரையும் அழைப்பார்கள். 10 பெயர்கள் கூறினால் 5 பெயர்கள் சரியாக இருக்கும். இவ்விஷயத்தில் **பிசாசின் ஆவி** இவர்களுக்கு உதவ துணையாக இருக்கும். உடனே இவர்கள் மேடையில் பெயர் கூறியவுடன் அந்த சாட்சிகள் மேடை ஏறி வருவதை நீங்கள் காணலாம். இவர்களை புகைப்படம் எடுத்து தங்கள் பத்திரிக்கைகளில் வெளியிடுவதைக் காணலாம். இப்படிப்பட்ட பிசாசின் ஆவியின் ஏவுதலால் உந்தப்பட்டு சாட்சி கூறுகிறவர்கள் இப்போது ஏராளம்-ஏராளம்.

அதனால்தான் **மனதில் தோன்றுகின்றதை கூறும் இப்படிப்பட்ட தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாக இருங்கள்** என்று கர்த்தர் நம்மை எச்சரிக்கிறார்.

❖ இயேசுகிறிஸ்துவும் ஜெபத்தில் பெயர்களை கூறி அழைக்கும் இப்படிப்பட்ட ஊழியக்காரர்களைப்பற்றி முன்பதாகவே எச்சரித்தார். **ஆண்டவரே, ஆண்டவரே** உம்முடைய **(இயேசு)** என்னும் நாமத்தில் **தீர்க்கதரிசனம்** உரைத்தோமல்லவா! பிசாசுகளை துரத்தினோம்லலவா அற்புதங்களை செய்தோம் அல்லவா! என்பார்கள். எல்லாமே இயேசுவின் நாமத்தில்தான் இவர்கள் ஜெபத்தில் பெயர்களை அழைத்தார்கள். ஆனால் இயேசுவோ இவர்களைப் பார்த்து உங்களை நான் அறியேன் என்று கூறி **அக்கிரம செய்கைக்காரர்களே என்னைவிட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்கு சொல்லுவேன் என்று கூறினார். மேலும் அவர்களைப் பார்த்து உங்களை நான் ஒருகாலும் அறியேன்** என்பாராம். மத் 7:22,23.

அப்படியானால் கிறிஸ்துவுக்கு சம்பந்தம் இல்லாமலே இவர்கள் யாவரும் **கூட்டங்களிலும், TVயிலும்** பல பெயர்களை ஜெபநேரத்தில் அழைக்கிறார்களே!, பல **வியாதியின்** பெயரை கூறினார்களே! எந்த ஆவியில் இதை செய்தார்கள்?. யோசித்து பாருங்கள்!. இயேசுகிறிஸ்துவே நான் அவர்களுக்கு உதவவில்லை என்கிறார். பின் யார்? இவர்களுக்கு உதவியிருப்பார்? பிசாசுதானே!. ஆம் பிசாசை தவிர வேறு யார் இவர்களுக்கு உதவ முடியும்?.

**கை நீட்டினால் விழுகிறார்கள், விரல் நீட்டினால் விழுகிறார்கள், ஊதினால் விழுகிறார்கள்? இப்படிப்பட்ட மேஜிக் வேலைகளை கர்த்தர் ஒருநாளும் செய்யமாட்டார்!.**

இந்த ஊழியர்கள் **ஜெபத்தில்** கூறுவது எல்லாம் **தோராய தீர்க்கதரிசனங்கள்.** தோராய பெயர்கள் ஆகும். **மனுஷ ஆவியுடன் - பிசாசின் ஆவியும்** இணைந்து இப்படி செயல்படும்.

❖ **இந்த நாஸ்டர்டம்ஸ் கிறிஸ்தவன் அல்ல. ஆனால் அவன் கூறியது மிக தெளிவாக நடந்ததே!**- பரிசுத்த ஆவியை பெற்றேன் என்று கூறும் இந்த பொய் தீர்க்கதரிசிகளால் ஏன் தெளிவாக தீர்க்கதரிசனம் உரைக்க முடியவில்லை-இவர்கள்தான் போலி ஊழியர்கள்.

## இந்திய தலைவர்களைப்பற்றிய நாஸ்டர்டம்ஸ் கூறிய தீர்க்கதரிசனம்:



**நாஸ்டர்டம்ஸ்** எழுதிய புத்தகத்தில் 6வது அத்தியாயத்தில் 74ம் பாடலில் **முன்னாள் பிரதமர் திருமதி.இந்திராகாந்தியின்** கொலைப்பற்றி கூறியிருக்கிறார்.

❖ **மூன்று புறம் கடல் சூழ்ந்த நாட்டில் பெரும் அதிகாரம் கொண்ட பெண்மணி** எதிர்கட்சிகள் ஒற்றுமையின்றி இருப்பதால் தேர்தலில் இழந்த அதிகாரத்தை இந்த பெண்மணி மீண்டும் பெறுவார் என்று எழுதியுள்ளார். அது அப்படியே நடந்ததே!.

மேலும் தன் சொந்த **மெய் காப்பாளர்களாளேயே** அவர் 67ம் வயதில் **கொல்லப்படுவார்.** இந்த சம்பவம் நூற்றாண்டு முடிய 16 ஆண்டுகள் இருக்கும்போது நடக்கும் என்று எழுதினார். அது அப்படியே நடந்தது.

❖ **இந்தியாவில்** எமர்ஜன்ஸியினால் தேர்தலில் தோற்றுப்போன **இந்திராகாந்தி** எதிர்கட்சிகள் ஒற்றுமை இல்லாமல் தமக்குள் சண்டைபோட்டுக்கொண்டதால் மீண்டும் ஆட்சியை கைப்பற்றியதையும் சீக்கியர்களின் பொற்கோவில் ராணுவத்தால் தாக்கப்பட்டபின் 1984ல் இந்திரா காந்தியின் சொந்த **சீக்கிய மெய்காப்பாளர்களால்** சுட்டுக்கொலை செய்யப்பட்டதையும் நாம் அறிவோம்.

## ராஜீவ் காந்தி கொலை:

தீடீரென்று வருவார்கள் பயங்கரத்தை நிகழ்த்திவிட்டு மறைந்துபோவார்கள். அந்த கருப்பு நிறப்பெண்ணை நீண்டகாலம் காணமுடியாது. அதில் சம்பந்தப்பட்டவர்கள் தூக்கிலிடப்படுவார்கள்.(C5-65).

❖ இந்த செய்யுள் **முன்னாள் பிரதமர்.திரு. ராஜீவ்காந்தியின்** மரணத்தோடு வெகுவாய் பொருந்துகிறது. பயங்கரவாதிகள் திடீரென்று தோன்றினார்கள். அவர்கள் வீசிய வெடிகுண்டுக்கு பிரதமர். **ராஜீவ்காந்தி** பலியானார். அந்த வெடி சப்தத்தில் **சதிக்கூட்டமும், அதன் தலைவரும்**

தப்பிவிடுகிறார்கள். இடுப்பில் வெடிகுண்டு கட்டிவந்து வெடிக்கச் செய்தவள் ஒரு **கருப்பு பெண்** ஆவாள். அவளும் துண்டுதுண்டாக வெடியில் சிக்கி சிதறிப்போனாள். **பிரதமர்.ராஜீவ்காந்தியும்** பலியானர். சதியில் சம்பந்தப்பட்டவர்கள் சிறைவாசம்,தூக்கு தண்டனை அனுபவிக்கும்படி ஆகும்.



Flashback: Dhanu, the suicide bomber; garlanding Rajiv Gandhi seconds before the explosion.

இன்னும் நிறைய தீர்க்கதரிசனம் எழுதியிருக்கிறார். **திரு.லால் பகதூர் சாஸ்திரி, திரு.மன்மோகன் சிங்** ஆகியவர்களைப்பற்றியும் தெளிவாக 500 வருடங்களுக்கு முன்பே எழுதி வைத்துள்ளார்.

❖ **இது பரிசுத்த ஆவியானவரின் தீர்க்கதரிசனம் அல்ல என்பதை வாசகர்கள் கவனிக்கவேண்டும். இது பிசாசின் ஆவியால் உரைக்கப்பட்ட தீர்க்கதரிசனமாகும்.**

❖ இப்படி உரைக்கும் பிசாசின் தீர்க்கதரிசனத்துக்கு **Femiliar Spirit** என்று பெயர். அதாவது முழு விவரமும் பிசாசுக்கு சொல்ல தெரியாது. ஆனால் ஒரு எல்லைவரை பிசாசுக்கு கர்த்தர் கொடுத்த சக்தியினால் தீர்க்கதரிசனம் கூறமுடியும். அற்புதங்களையும் செய்ய முடியும். அதற்குமேல் ஒன்றும் கூற தெரியாது. அப்படியே இந்த அற்புதங்களை செய்யும் பிசாசுக்கு அற்புதம் மட்டும் செய்யும் தனி கூட்டம் உண்டு. ஜனங்களுக்கு **வசனத்தின்படி** ஜீவிக்க ஆலோசனை கூறாமல், **பாவத்தைக்குறித்த எச்சரிப்பை** இவர்கள் கூறாமல் வெறும் **அற்புதத்தைமட்டும்** செய்வதுதான் **பிசாசின் தந்திரம். அப்படிப்பட்ட அற்புதம் இப்போதும் நடக்கிறது.** ஆனால் அந்த அற்புதங்கள் தற்காலிகமாக இருக்கும். நிரந்தரமாக இருக்காது. ஜனங்களை வஞ்சிப்பதற்காக அப்படிப்பட்ட **அற்புதத்தை பிசாசின் கூட்டங்கள்** செய்யும்.

இப்போது **மேடைகளில் நடக்கும் சுகமளிக்கும் கூட்டங்கள்** யாவும் அப்படிப்பட்டதே. இந்த **பொய் ஊழியர்கள்** கூட்டத்தில் உள்ளவர்களின் யாருடைய பாவங்களையும்,குற்றங்களையும் சுட்டிக்காட்டமாட்டார்கள். அவர்களின் **குறைகளையும்,தவறுகளையும்** சுட்டிக்காட்டி எச்சரிக்கமாட்டார்கள்!. அப்படி செய்தால் அடுத்த நாள் ஆட்கள் கூட்டத்துக்கு வரமாட்டார்கள் என்பதை இந்த ஊழியர்கள் நன்றாக அறிவார்கள். இவர்களுக்கு உதவுவதற்காக **பிசாசு** தன் குழுக்களில் பலரை இவர்களுக்கு உதவியாக கூட்டத்தில் அற்புதங்களை நிகழ்த்த வேண்டி அனுப்புவான். வெளி 16:14. **அற்புதங்களை செய்கிற பிசாசுகளின் ஆவிகள்.... உலகத்துக்குள் புறப்பட்டுப்போனது.**

ஆகவே சபை விசுவாசிகள் இப்படிப்பட்ட **அற்புத ஊழிய** கூட்டங்கள், **தீர்க்கதரிசன** கூட்டங்கள், **அக்கினி அபிஷேக** கூட்டங்களுக்கு செல்வதைக்குறித்து எச்சரிக்கையாக இருப்பது நல்லது. வசனத்துக்கு **நீங்கள் கீழ்ப்படிந்தாலே சுகம் தானே கிடைக்கும்.** சங் 107:20.

❖ 1 தெச 9:2,3 அந்த **அக்கிரமக்காரனின் வருகை** சகல அடையாளங்களோடும் **பொய்யான அற்புதங்களோடும்** விளங்கும் என்று குறிபிடப்பட்டுள்ளது. **இங்கு பொய்யான அற்புதம்** என்று குறிப்பிட்டிருப்பதை கவனியுங்கள்.

அற்புதம் போலவே இருக்கும். ஆனால் அது நிரந்தரம் அல்ல. **உங்களுக்கு அற்புதம்** கிடைக்கும். ஆனால் உங்களிடம் **சாட்சியுள்ள ஜீவியம்** இருக்காது. **தேவ பயம்** இருக்காது. பாவத்தை தொடர்ந்து செய்வீர்கள்.

ஆனால் **கர்த்தரின் தொடுதலாக இருந்தால் அது உங்களை பரிசுத்தத்தில் நடத்தும்.** சாட்சியுள்ள ஜீவியத்துக்கும் வழி நடத்தும்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

(மகளிர் ஆண்டுக்காக ஜாமக்காரன் வாசகர்களுக்காக தெரிந்தெடுத்த செய்தி)



# பெண்கள் நம்பும் பொய்கள்



Dr.LillyinStanley

*டாக்டர்.**லில்லியன் ஸ்டான்லி** அவர்கள் சகோ.R.**ஸ்டான்லி**(ஆசீர்வாத இளைஞர் இயக்கம்) அவர்களின் மனைவி ஆவார். இவர் எழுத்து கொஞ்சம் சூடாக இருக்கும். இதை வாசிக்கும் வாசகர்கள் இதில் நல்ல ஆலோசனை எது?- ஏற்றுக்கொள்ளமுடியாத ஆலோசனை எது? என்பதை நிதானித்து பார்த்து பயன்படுத்திக்கொள்ளவும்.*

## 1. நான் ஆணுக்குக் குறைந்தவளா?:

இல்லை. நீ குறைந்தவளல்ல. கணவன் தலையானால் மனைவி கழுத்து, இரண்டுமே முக்கியம்தான். காரில் எது முக்கியம்? ஸ்டீரிங் வீலா, எஞ்சினா, கீயரா? குடும்பம் ஓர் அமைப்பு, ஆண் எத்தனை முக்கிமோ பெண்ணும் அத்தனை முக்கியமே.

இரண்டே விதமான மக்கள்தான் உள்ளனர்- வேதத்தைச் சார்ந்தவர். வேததற்திற்குப் புறம்பானவர். பாக்கியவான்கள் யார்? ஆண்களா, பெண்களா? இயேசு போதித்தது. "ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்... சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்...." "நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்... நீங்கள் உலகத்திற்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்". ஆணோ பெண்ணோ அல்ல, **"நீங்கள்"** என்பதையே இயேசு பன்மையில் இருபாலருக்கும் சேர்த்து வலியுறுத்தினார். யார் பெரியவர்? ஆணா,பெண்ணா? இந்த பிள்ளையைப்போலத் தன்னைதாழ்த்துகிறவனெவனோ அவனே இறையரசில் பெரியவனாயிருப்பான்"(மத் 18:4). "இவைகளைக் கைக்கொண்டு போதிக்கிறவனோ, இறையரசில் பெரியவன் என்னப்படுவான்"(மத் 5:19). ஆணா, பெண்ணா என்று போட்டியிடுவதை விட்டுவிட்டு நம்முடைய ஆன்மீக வாழ்வில் குடும்பமாக முன்னேறுவதில் கவனம் செலுத்துவோம்.

நீங்கள் எல்லாரும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே... ஏனெனில் உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக திருமுழுக்கு பெற்றவர்கள் எத்தனை பேரோ அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே,யூதனென்றும், கிரேக்கனென்றுமில்லை.அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை. ஆணென்றும்,பெண்ணென்றுமில்லை. நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள் என்று வேதம் கூறுகிறது கலா 3:26-27. கிறிஸ்துமஸ் தாத்தா உடையணிந்து ஒருவர் வரும்போது, உள்ளிருப்பவர் ஆணா-பெண்ணா என்று அறியமுடியுமா? கிறிஸ்துவை அணிந்துக்கொள்வதும் அப்படித்தான். நம் யாவரையும் ஒன்றாக்குகிறார். ஆணுக்குப்பெண் குறைவுஇல்லாதவள் என்ற எண்ணம் உள்ளத்தில் ஒளிந்துகொண்டிருக்குமானால் ஆணுக்கு நிகராகக் காரியங்களைச் செய்யமுற்படுவாய். சாத்தான் முதலாவது தவறான எண்ணத்தை ஊட்டிவிட்டு, பின் உங்களை ஒரு ஆணைப்போலாகத்தள்ளி விடுவதினால், நீ தேவன் உனக்களித்த அழைப்பை அசட்டை செய்ய உங்களை தூண்டுவான். வீட்டிற்கு வெளியே பெண்கள் வேலை செய்வதற்கு வேதம் மறுப்புத் தெரிக்கவில்லை. பெண்கள் வெளி வேலையே செய்யாத யுகத்திற்கு திரும்பவேண்டுமென்று நானும் கூறவிரும்பவில்லை. ஆணுக்குக்கட்டளை இதுதான். பாடுபட்டு வியர்வை சிந்தி சம்பாதிப்பது ஆணுக்குக் கொடுக்கப்பட்ட தண்டனை. ஆனால் **பெண்ணாகிய வேதனையோடு பிள்ளை** பெறுவதோடுகூட நீ கூடுதலாக உன்னை ஏன் தண்டித்துக் கொள்ளவேண்டும்?.

பெண்கள் கூடுதல் வேலைசெய்வதால் மிகவும் பாதிக்கப்படுவது ஊழியம்தான். ஊழியத்திற்கான ஜெபம் குறைவுபடுகிறது. வேலையாட்கள் பற்றாக்குறை, வேதத்தை கற்று, போதிக்க பெண் எண்ணிக்கை மிகவும் குறைவு. பெண்கள்ஊழியமும்,பெண்கள் வேதஆராய்ச்சிக்குழுக்களும் பஞ்சப்பாட்டு பாடுகின்றன. சுயாதீனத்தையும், சுய கௌரவத்தையும் நாடுவதாலேயே பெண்கள் வேலையைதேடி வேட்டையாடுகின்றனர். அவற்றை வீட்டிலேயே கொடுத்துவிட்டால்? வேலை செய்வோர் கூட்டத்தில் பெண்கள் அலையலையாய் சேருவதையும், அப்படிப்பட்டவர்கள் கைநிறைய சம்பாதித்து அட்டகாசமாய் வாழ்வதையும் காணும் இளம்பெண்கள், வீட்டில் தரித்திருக்கும் எண்ணத்தை தூர தூக்கி எறிகின்றனர். வேலை செய்தே தீரவேண்டுமென்றால் வீட்டிலிருந்தே செய்யலாம் அல்லது பகுதி நேரம் செய்யலாம். ஒரு பெண்ணின் எதிர்காலம் மெல்லிய இழையில் தொங்குவதால் அவள் ஒரு வேலையில் தேர்ச்சி பெற்றிருப்பது அவள் வாழ்க்கையில் அவசரத்திற்கு உதவும்.

## 2. கணவனுக்கு நூற்றுக்குநூறு கீழ்ப்படியவேண்டுமா?:

இல்லை. அவசியமில்லை. **கணவர்** தெய்வங்களல்ல. நம்மைப்போல் மனிதர்தான். அமைப்பு செவ்வனே இயங்கும்படியாக **தேவன் ஆணைத்** தலையாக்கினார். நாம் தவறு செய்வதுபோலவே அவர்களும் தவறு செய்யலாம். அவிசுவாசிகளான **கணவர்** மட்டுமல்ல. **விசுவாசிகளும்**கூட தவறு செய்யலாம். **கணவருக்குப்** பெண்களை அடிப்பணிய அழைக்கும் முன்பாக எபேசியர் 5 அத்தியாத்தில் வசனம் 8ல் இருந்தே முன்னுரையாக பவுல் எழுதுகிறார். "முற்காலத்தில் நீங்கள் அந்தகாரமாயிருந்தீர்கள். இப்பொழுதோ கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர்கள், வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்துக்கொள்ளுங்கள்"(வச 8). குருட்டுப் பூனையைப் போல் நடவாமல் தேவன் நமக்களித்த வெளிச்சத்தில் நடக்கவேண்டும்".... கர்த்தருக்குப் பிரியமானது இன்னதென்று நீங்கள் சோதித்துப் பாருங்கள்"(வச 10). நாம் செய்யப்போவது தேவனது மகிழ்ச்சியான அங்கீகாரத்தைப்பெறுமா என்பதை முதலில் பகுத்தறியவேண்டும். "தூங்குகிற நீ விழித்து மரித்தோரைவிட்டு எழுந்திரு. அப்பொழுது கிறிஸ்து உன்னை பிரகாசிப்பிப்பார்(வச 14). நாம் தூக்கத்தில் நடக்கிறவர்கள் போலவோ, சடலங்கள் போலவோ மற்றவர்கள் நம்மைத் தம் இஷ்டத்திற்கு ஆட்டிப்படைக்க இடமளிக்காமல் கிறிஸ்து அளிக்கும் வெளிச்சத்தைத்தேடவேண்டும். நீங்கள் ஞானமற்றவர்களைப்போல நடவாமல் ஞானமுள்ளவர்களைப்போல கவனமாய் நடந்துக்கொள்ளுங்கள்"(வச 15). கவனம் என்பது சூழ்நிலைகளையும் விளைவுகளையும் கணித்து விவேகமாய் நடந்துக்கொள்வது ஆகும். ஆகவே பெண்கள் தெய்வபயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள்(வச 21). கீழ்ப்படிதல் என்னும்போது கணவனுக்குப் பயப்படும் பயமல்ல. இதில் தேவபயமே மேலோங்கியிருக்க வேண்டும். மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறதுபோல உங்கள் சொந்த புருஷருக்குக் கீழ்ப்படியுங்கள்(வச 22). "ஆண்டவர் இந்தக் காரியத்தைச் செய்யும்படி என்னைக்கேட்பாரா? என்ற கேள்வியைக் கேட்டுப்பாருங்கள். சபையானது கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறதுபோல மனைவிகளும் தங்கள் சொந்தப் புருஷர்களுக்கு எந்த காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்கவேண்டும் என்று வேதம் போதிக்கிறது.(வச 24). ஒத்துப்போக முடியாமலே, கீழ்படியமுடியாமலோ சில குறிப்பிட்ட விஷயங்களில் இருக்கும் பட்சத்தில் அகங்காரமாயல்ல,பிடிவாதமாயுமில்லாமல் பணிவோடு செய்யுங்கள். விவேகம்,புத்தி,ஞானம், அறிவுக்குறித்து இவ்வளவு போதித்துவிட்டு, நிச்சயமாய் பவுல் மரப்பாச்சி(பொம்மைப்போல்)கீழ்ப்படிதலை ஊக்குவிக்கவில்லை. மனைவியார் நூற்றுக்குநூறு கீழ்ப்படிந்ததால் சமூகத்தில் பலவிபரீதங்கள் நேர்ந்திருக்கின்றன. சப்பீராளை யோசித்துப்பாருங்கள். பெண்கள் யோசித்து செயல்படுவதை தேவன் விரும்பாவிட்டால் பெண்களுக்குத் தெளிந்த புத்தியைக் குறித்து வேதம் இவ்வளவு எழுதவேண்டிய தேவையென்ன? சமயோசித புத்தியைப் பயன்படுத்துங்கள். அசம்பாவிதத்தை ஆபத்தை பெண்கள் உணருவீர்களானால்கீழ்ப்படிதலைத்தவிர்த்துவிடுங்கள்.பாலியப்பெண்கள்.தெளிந்தபுத்தியுள்ளவர்களும் ...தங்கள் புருஷருக்குக்கீழ்ப்படிகிறவர்களும்"(தீத்து 2:4,5).மாயிருக்கவேண்டும் என்று வசனம் கூறுகிறது.

எங்களது குடும்ப முகாம்(Blessing Youth Mission) ஒன்றில் கணவரும் மனைவியரும் நிரப்பிக் கொடுக்க (form)படிவங்கள் விநியோக்கிக்கப்பட்டன. அதில் ஒருவர் **"என் மனைவி எனக்குக் கீழ்ப்படிவதில்லை"**என்று எழுதியிருந்தார். பரிதாபப்பட்டேன். ஆனால் அவரது மனைவியின் படிவம் வந்தபோது. **என் கணவர் குடிக்காரர்.** என்று எழுதியிருக்கக்கண்டேன். அழுவதா,இல்லைச் சிரிப்பதா? மது,மாது விவரங்களில் மனைவிக்கு கீழ்ப்படியாத கணவன்,மனைவியின் கீழ்படிதலுக்குத் தகுதியற்றவன். இதனால் அவரை அலட்சியம் செய்யவேண்டுமென்தல்ல. எப்போது கீழ்ப்படியக்கூடாது என்பதில் விழிப்பாயிருக்கவேண்டும்.1 பேதுரு 3:1-4ஐக் கைக்கொள்ளளும்போது அதில் குறிப்பிட்டுள்ள **நடக்கை** என்பது விவேகமான கீழ்படிதலையும்உள்ளடக்கும் என்பதை நினைவிற்கொண்டு, கீழ்ப்படி யாதிருக்கவேண்டிய சூழ்நிலையில் பெண்கள் **சாந்தமும்** அமைதலுமுள்ள ஆவியோடிருக்கவேண்டும்.

"மனைவிகளே, கர்த்தருக்கேற்கும்படி உங்கள் புருஷருக்குக் கீழ்ப்படியுங்கள், என்கிறது. கொலே 3:18. உங்கள் கீழ்படிதலை அங்கீகரித்து தேவன் ஆனந்தமாய் தலையசைப்பாரா? என்பதை அந்த சூழ்நிலையில் யோசித்துபாருங்கள். பின்வரும் கேள்விகளையும் கேட்டுப்பாருங்கள். எனது கீழ்ப்படிதல் தேவனுக்கு மகிமையைக் கொண்டுவருமா? என் குடும்பத்தைக் காயப்படுத்துமா? யாருக்கேனும் பங்கம் விளைவிக்குமா? நல்ல சாட்சியாக இருக்குமா? என் மனச்சாட்சியை களங்கப்படுத்துமா? சந்தோஷமாய் மற்றவர்களுடன் என் அனுபவத்தை பகிர்ந்துக்கொள்ள முடியுமா? என் கீழ்ப்படிதலினால் தேவனைப் பின்பற்றுகிறவளாயிருப்பேனா? அன்பிலே நடந்துக் கொள்கிறவளாயிருப்பேனா?. ஞானத்திற்கும் கணவனுக்கும் கீழ்ப்படிதலுக்கு இடையிலுள்ள கத்திக் கூர்மை விளிம்பில் நடப்பதைபோல் ஒரு பெண் நடக்கவேண்டும். கயிற்றின்மேல் நடக்கும் இந்த வித்தையைக் கற்பிக்க அனுபவமே அவளுக்கு ஆசிரியை. **எஸ்தர்** அதைச்செய்தாள். உங்களது **கீழ்ப்படியாமை** உங்கள் **கணவரை கௌரவிக்கு மானால்** அதைத்தான் ஞானம் எனலாம்.

## 3. எனக்கு ஞானமில்லை:

யார் சொன்னது? பெண்கள் பலர் தங்களுக்கு ஞானமில்லையென்று அங்கலாய்க்கிறார்கள். சமுதாயம் **"பெண்புத்தி-பின்புத்தி"**என்று மொழிந்ததால் அதை நம்பி ஏற்றுக்கொள்கிறார்கள். புத்தியீனமாய் நடந்துகொண்டால் தங்களையே நொந்துக்கொள்கின்றனர். நீங்கள் ஞானத்தில் வளரவேண்டுமேயொழிய வேறொன்றுமில்லை. ஞானத்திற்கான இறைவாக்கு ஆண்களுக்கு மட்டுமல்ல,பெண்களுக்கும்தான்(யாக் 1:5). நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் தேவனிடம் கேட்க வேண்டியதொன்றே,பெரிய காரியங்களுக்குமட்டுமல்ல, அன்றாடத் தீர்மானங்களுக்கும்தான். திடீர் ஜெபம் மட்டுமல்ல. அனுதின ஆழமானவிடாப்பிடி அங்கலாய்ப்புள்ள ஜெபம் அப்படிப்பட்ட ஜெபத்தில் நீங்கள் கேட்டால் ஏராளமாய் தாராளமாய்க்கிடைக்கும். எழுதுகிறநானும் ஞானத்திற்காய் இறைவனடி யைப்பற்றிக்கொண்டு மன்றாடினேன். மாற்றத்தைக் கண்டேன்.அதன்பின் எவ்வளவோதூரம் ஆவிக்குரிய முதிர்ச்சியில் கடந்து வந்திருக்கிறேன்."கேட்டல்"என்ற எளிமையான காரியத்தை எத்தனை பேர்செய்கிறோம்?சந்தேகமின்றி நம்பிக்கையோடுகேளுங்கள். தலையே பெண்ணுக்குத் தலை சிறந்த ஆயுதம். ஞானம் என்பது ஞானத்திற்காய் ஜெபிப்பது மட்டுமல்ல. ஞானமான காரியங்களைச் செய்வதுமே. இயேசுகிறிஸ்து மத்தேயு 7:24ல் வரைந்த கோட்டில் வழுவாமல் நடக்கவேண்டும். "நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக்கேட்டு, இவைகளின்படி செய்கிறவன் எவனோ,அவனை... புத்தியுள்ள மனிதனுக்கு ஒப்பிடுவேன்" நீதிமொழிகள் 3அத்தியாயம் ஞானத்தின் புகழைப்பாடுகிறது. ஆனால் அதைச்சொந்தம் கொண்டாடுபவர் யார்?"நீ உன்னை ஞானியென்றுஎண்ணாதே, கர்த்தருக்குப் பயந்து தீமையை விட்டுவிலகு"(நீதி 3:7)என்ற இந்த வார்த்தைகள் இதைவிடத் தெளிவாய் இருக்க முடியுமா? கடவுளுக்கு நடுங்கி தீமையைக் கண்டால்தூர ஓடுவதே புத்திசாலித்தனம். சந்தேகமான காரியமாயிருந்தால் சாதுரியமாகக் கைக்கழுவிவிடுங்கள் உங்களுக்கு சந்தேகம்வருமனால் வேதத்தை ஆராயுங்கள். தேவன் நமக்குத் **தெளிந்த புத்தியுள்ள ஆவியைக்** கொடுத்திருக்கிறார்.(2தீமோ 1:7).

# 4. நசுக்கப்படுவதினால் நலிந்துப்போய்விட்டேன்:

ஊஹூம். நீங்கள் நலிந்துபோய்விடவில்லை. எந்தவொரு வெளிப்புறச் சக்தியும் உங்களை நசுக்கிவிடமுடியாது. நீங்கள் **பலவீனராயிருந்தால்** பலவானாவீர்கள் என்பதுபோன்ற வேடிக்கையான தத்துவங்களை வேதத்தில் காணலாம். தோற்றத்தில் நோஞ்சானாயிருந்த **பவுல்** மலைக்க வைக்கும் அப்போஸ்தலனானார். **அநாதை எஸ்தர்** சரித்திரத்தின் ஏடுகளையே தலைகீழாய் திருப்பினாள். நசுக்கப்பட்ட எபிரெயர் நட்சத்திரக் கூட்டாயினர். அடிப்பணிந்தால் அலாக்காகத் தூக்கப்படுவீர்கள். நாம் நம்புவதற்கு முரணானவை இவை. கணவனோ,மாமனார்,மாமியாரோ,பெற்றோரோ, உடன்பிறப்புகளோ,பெண்களான,தலைவரோ மற்றெவரோ நம்மைத் தலையில் குட்டிக்கொண்டே இருக்கலாம். இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஆக்ரோஷமடைவதோ ஆசீர்வதிப்பதோ அது நமது தெரிந்தெடுப்பை சார்ந்தது. இறையரசின் எதிர்மறைகளை மலைப்பிரசங்கம் கோடுபோட்டுக்காட்டுகிறது. நீங்கள் **ஆவியில் எளிமையுள்ளவர்களானால்** இறையரசின் சொந்தக்காரராவீர்கள்- யுத்தம் செய்து கைப்பற்றுவதினாலல்ல. அழுகிறீர்களானால் ஆறுதல்படுத்தப்படுவீர்கள்- துக்கத்தின் காரணத்தைக் துடைத்தெறிவதினாலல்ல. சாந்தகுணமுள்ளவர்கள் பூமியைச் சுதந்திரித்துக்கொள்வார்கள்- பிறர் தலையில் மிளகாய் அரைப்பவர்களல்ல(மத் 5:3-5). என்னுடைய யுத்தங்களை நானே நடத்தாவிடில் கடவுளே எனக்காக யுத்தம் செய்வாரென்பது எனது அனுபவத்தில் நான் கண்ட உண்மை.

நீங்கள் கீழே தள்ளிவிடப்படலாம். அலட்சியப்படுத்தப்படலாம். தூசியென துடைத்தெறியப் படலாம். கலங்காதீர்கள். **லேயாள்** காயப்படுத்தப்பட்டு, அவமானப்படுத்தப்பட்டதைக் கண்ட கர்த்தர் அவளை தாய்மையடையச் செய்து, இயேசுவின் முன்மாதாவாக்கி அவளைத் தூக்கி நிறுத்தினார். அவர் அழுகையை மாத்திரமல்ல, பெருமூச்சையும் கேட்கிற தேவன்(ஆதி 21:17, யாத் 2:24). கராத்தேயை நிறுத்தி, கரங்களை உயர்த்தி, உங்களைக் கடிப்பவரை ஆசீர்வதியுங்கள். அதன்பின் அசத்தும் விளைவுகளைக் காண்பீர்கள். விரோதமும் குரோதமும் உங்களுக்குள் கொதித்துக் கொண்டிருக்க இடமளிப்பீர்களானால் உங்கள் குடல்கள் வெந்துபோகும்." தேவரீர் சகலத்தையும் செய்ய வல்லவர், நீர் செய்ய நினைத்தது தடைப்படாது(யோபு 42:2). தேவன் உங்களுக்காய் தீட்டியுள்ள திட்டத்தை தீண்ட யாராலும்முடியாது. தேவனோடு பேசுங்கள்,**உங்களோடும்** பேசுங்கள். **வசனங்களோடு** பேசுங்கள். சாத்தானும் கொஞ்சம் பேசிப் பார்க்க வருவான். விரட்டியடியுங்கள்.

ஊழியத் துவக்க நாட்களில் தலைவர்கள் சிலருக்கு காலைச் சிற்றுண்டி செய்ய ஒரு குழு ஆயத்தமானது. பொறுப்பாயிருந்த சகோதரி என்மேல்கொண்ட பொறாமையினால் என்னை ஒதுக்கிவிடுவார்கள். எனக்கு ஏதாவது வேலை கொடுக்கும்படி நான் கெஞ்சியபோது, "சரி போ, இட்லிக்கு மாவாட்டு" என்றார்கள். அது முந்தினநாள் வேலை என்பது யாரும் அறிந்ததே. அந்நாட்களில் மின் இயந்திரம் இல்லாததால் கல்லில் ஆட்டினேன். மறுநாள் தலைவர்கள் வந்தபோது அந்த சகோதரி தலைவர்களிடம் நற்சான்று வாங்குவதற்காக அங்குமிங்கும் ஓடிக்கொண்டிருந்தபோது நான் சிலையென நின்று எனக்காகப் பரிதாபப்பட்டுக்கொண்டிருந்தேன். எல்லோரும் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது ஒருவர், "இட்லி எப்படி இவ்வளவு பஞ்சுபஞ்சாக சென்றிருக்கிறது? என்றார். மற்றொருவர் "இட்லியின் இரகசியமே மாவட்டுவதில்தான் இருக்கிறது. யார் மாவட்டியது? என வினவினார். என் கணவர் பெருமையாக, " என் மனைவிதான்" என்றார். தலைவர்கள் யாவரும் என் பக்கமாய்த் திரும்பி நான் பீட்ருட்டாய் சிவக்கும்வரை மெச்சினர். யாவரும் சென்றபின் நடந்த கலாட்டாவைச் சொல்லவும் வேண்டுமா? தேவன் அநீதியுள்ளவரல்ல. இது ஓர் அற்ப எடுத்துக்காட்டு. பிறர் என்னைத் துச்சமாய் நடத்தியபோதெல்லாம் தேவன் என் கரங்களைப் பிடித்து வெறுப்பை வெறுப்பால் தாக்குவது மடமை எனக் கற்பித்திருக்கிறார். இருப்பினும், நீங்கள் சுயபரிதாபத்தில் மூழ்கிக்கொண்டிருக்கிறீர்களா, எழுந்துப் பிரகாசிக்க முழு முயற்சி எடுத்தீர்களா, சுயஉரிமையை நிலைநாட்டாமல் விட்டுவிட்டீர்களா என்று எந்தச் சூழ்நிலையையும் சீர்தூக்கிப்பார்க்கவேண்டும்.

இழிவானவர்கள் உடலளவிலோ,மனதளவிலோ தொல்லை கொடுக்க யாரும் இடமளிக்கக்கூடாது. யாரும் உங்களைத் தங்கள் விருப்பப்படி பந்தாடக்கூடாது. சுய கௌரவமென்பது ஒவ்வொருவரது உரிமை. எப்போது **சுய உரிமைக்காய்** வாதாடவேண்டும். எப்போது அமைதி காக்க வேண்டும் என்பதை நெடுநாள் அனுபவங்கள் வீசும் வெளிச்சத்தில் கண்டறியலாம்.

## 5. நான் தேவனைச் சேவிக்க முடியாது:

ஏன் முடியாது? கணவன், பிள்ளைகள்,பெற்றோர், மாமியார், மாமனாரைக் கவனித்து வீட்டைப் பேணுவதும் தேவ சேவை என்பதை முதலாவது புரிந்துக்கொள்ளவேண்டும். கூட்டுவதும்,கழுவுவதும் அதற்குக் குறைவல்ல. நற்செயலர்கள், பிள்ளைகளைப்பேணுதல், அந்நியரை உபசரித்தல், ஊழியருக்கு உதவிசெய்தல்,துன்பப்பட்டோரின் துயர்துடைத்தல், வீட்டை நடத்துதல் யாவும் **பெண்கள்** ஊழியங்களாகும்(1 தீமோ 5:10-14). எப்பக்கத்திலிருந்தும்(பலமுறை கணவர் உட்பட) சோர்பு, குற்றச்சாட்டு, கிண்டல் போன்றவற்றை ஒரு பெண் தொடர்ந்து சந்திப்பதால் அந்த சூழ்நிலையில் அவள் ஊழியம் செய்வது கடினம். இதற்கெல்லாம் மேல் அவள் எழும்புகிற அளவு அவளுக்கு ஆன்மீக வலிமை இன்றேல் அவள் அதிகம் சாதிக்க முடியாது.

**தெபொராளைப்** பாருங்கள். "நான் பெண், யுத்தத்திற்கு எப்படிச் செல்வேன்?" என்று தயங்கியிருந்தால் என்னவாகியிருக்கும்? **பாராக்** செய்தது அதுதான். அவனுக்கு தேவன் மேலோ தன்மேலோ நம்பிக்கை கிடையாது. ஆகவே தேவன் வேறொருவரைத் தேடி பெண்ணாகிய **தெபொராளைக்** கண்டுபிடித்தார். அவள் தன் குடும்பத்தைப் பராமரித்ததோடு இஸ்ரவேலுக்கு நியாயாதிபதியுமாயுமிருந்தாள்.

தேவன் அவளைப் போருக்கு அழைத்தார். "ஒ.கே"என்றாள். அவளால் முடியுமா? அவளாலல்ல. அவளை அழைத்த தேவனின் பெலத்தினால் முடிந்தது. போரில் நடந்ததென்ன? நடந்த அற்புதங்களைப் பாருங்கள்.......

மக்கள் மனப்பூர்வமாய்த் தங்களை ஒப்புக்கொடுத்து அவளுக்கு உதவினார்கள்(நியா 5:2). பூமி அதிர்ந்தது(வச 4) வானம் சொரிந்தது பர்வதங்கள் கரைந்தன. நட்சத்திரங்கள் தங்களை அயனங்களிலிருந்து சிசராவோடே யுத்தம்பண்ணின. ஆற்றுவெள்ளம் எதிரிகளை அடித்துக்கொண்டுப் போயிற்று. எதிரி குதிரைகளின் குளம்புகள் பிளந்துப்போயின. வேறொரு பெண் யாகேல் சிசெராவைக் கொன்றுப்போட்டாள். **தெபொராள்** செய்தது ஒ.கே ஒன்றுதான்.

**ஒரிசாவில்** பட்டினியால் வாடுவோர், வீடற்றோர் மற்றும் நோயாளிகளுக்கு உதவிசெய்ய தேவன் என்னை அழைத்தபோது மலையைப் பார்த்து மலைத்து நின்ற எலியைப்போல் தடுமாறினேன். தெபொராளுக்கு நடந்ததே எனக்கும் நடந்தது. எண்ணற்றோர் வந்துதவினர். இன்று நமது மிஷனரிகள் அங்கு அற்புதமாய் சேவை செய்கின்றனர். ஆயிரக்கணக்கானோர் பயனடைகின்றனர்.

தேவனுக்கு "ஒ.கே" என்று தலையசைப்பீர்களானால் உங்கள் வாழ்வில் பூங்காற்று வீசும். "ஒ.நோ" ஆண்டவரே, என்று சொல்லிக்கொண்டிருக்கிறீர்களா? பலர் தேவனது அழைப்பை அல்லத்தட்டி நிற்கிறீர்கள். தலை வணங்கி, "இதோ வருகிறேன்" என்று சொல்வீர்களா?.

## 6. இந்த இடியில் நான் பிழைக்கமாட்டேன்:

நிச்சயமாய் பிழைப்பீர்கள். நோய், பேரிழப்பு, துயரம், ஏமாற்றம், பிரிவு, நஷ்டம், விபத்து, உதிரும் திருமணம் இவை நம்மை இடியாய்த் தாக்கும்போது, வாழ்க்கைப்படகு கவிழ்ந்து துணிவை அவித்துப்போடலாம். நானும் இருந்தென்ன, வாழ்க்கை வாழ்ந்தென்ன என்று நானுமே நினைத்த நாட்களுண்டு. பல செக்குகளை இழுத்து வந்திருக்கிறேன். ஆனால் இன்றோ தலையில் விழுந்த ஒவ்வொரு இடியும் கற்பித்தப் பாடங்களினால் ஆன்மீகத்தில் செல்வச்சீருடன் அகமகிழ்கிறேன்.

வாழ்க்கை ஒரு ரோலர் கோஸ்டர். அடுத்தத்திருப்பம் என்னவென்று சொல்லவியலாது. வாழ்க்கை அள்ளி அளிப்பதைக் கொண்டு சிறப்பாய் செயல்படப் பழகவேண்டும். சிலர் இடிதாங்கிகளாய் துயரங்களை ஏற்று நிற்க உறுதியுள்ளவர்கள். சிலர் துவண்டுவிடுவர். மனநிலைப் பாதிப்புகள் மனநோய்க்கோ தற்கொலைக்கோ வழிநடத்தலாம். ஆகவே முதலாவது நீங்கள் செய்யவேண்டியது துயருர நேரமெடுத்தலாகும். "அழாதே கண்ணைத் துடைத்துக்கொள். அழுது என்ன பயன், எழுந்திரு. வெளியே வா" என்று சிலர் நல்லெண்ணத்தோடு உங்களை அவசரப்படுத்தலாம். துயரம் என்பது வாழ்வின் ஓர் உண்மை. **நேரமெடுத்துச் கொள்ளுங்கள்.** அழுவது, பிறரை சந்திக்க மறுப்பது, முடங்கிக் கிடப்பது இவையெல்லாம் இயல்புதான் பரவாயில்லை.

துயரத்தில் மூழ்குவோர் ஓராண்டில் பழைய நிலைக்குத் திரும்ப எதிர்ப்பார்க்கப்படுகிறார்கள். என்றாவது ஒருநாள் நீங்கள் உண்மையை ஏற்றுக்கொண்டு, எதிர் சக்திகளை முறியடித்து, சவாலை எதிர்க்கொண்டு உயிர்மீட்சியடையத்தான் வேண்டும். வளையிலிருந்து வெளிவந்து மக்களைச் சந்திக்கத் துவங்குங்கள். உங்களைப்போன்ற மக்களுடன் கரங்கோர்த்து, அதே நிலையில் தத்தளித்துக் கொண்டிருப்போரை தாங்கிப்பிடிக்க ஒரு சுமைதாங்கிக் குழுவை உருவாக்குங்கள். புதுக் கலைகளைக் கற்கலாம். கணணியோ, ஓவியக் கலையோ உங்கள் ஆர்வத்தைத் துாண்டிவிடும் எதிலாகிலும் தேர்ச்சியடையலாம். நடப்பதுபோன்ற உடற்பயிற்சி உங்கள் மனதுக்கும் உடலுக்கும் இதமளிக்கும். வாழ்க்கையை அனுபவிக்கப் பழகுங்கள். முன்னோக்கிப் பாருங்கள். பின்னிட்டுப் பார்க்காதேயுங்கள். கடந்த காலத்தின் கைதியாகிவிடாதபடிக்கு விழிப்பாயிருங்கள்.

கடினமான சிக்கல்களுக்குத் தீர்வுகாண தேவன் உறுதியானவர்களைப் பொறுக்கியெடுக்கிறார். மற்றப் பெண்களுக்கு கற்பிப்பதற்காக இந்தக் காரியம் உங்களுக்கு நடக்க நீங்கள் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களோ என்னவோ, உங்களுக்கு நேரிட்ட ஒரு பயங்கரத்தை அப்படியே திருப்பி பிறருக்கு வழிகாட்டியாக்கலாம்.

உங்கள் நிலையை நினைத்து நொந்து நொந்து வாழ்வை வீணடிக்கக்கூடாது. முன்னேறுங்கள். ஒரு பெண், மனைவி, தாய், எருமை மாட்டைப்போலவாயிருக்கவேண்டும். எழுந்து நில்லுங்கள். தைரியம் கொள்ளுங்கள். வீறுநடை போடுங்கள்.

## 7. நான் முற்றிலும் தோற்றவள்:

இல்லை. இல்லவேயில்லை. மறுபடியும் உங்கள் வாயால் அப்படிச் சொல்லாதீர்கள். வாழ்க்கையில் தோல்வியுற்றவர் என்று நம்மை நாம் கணிப்பதற்குக் காரணம் நாம் தோல்வியுற்றவர் என்பதினாலல்ல. நம்முடைய அன்றாட வெற்றிகளை நாம் கணக்கெடுக்காததினால், நீங்கள் வாழ்க்கை ஓட்டத்தில் தோற்றுப் போனவர்கள் என்று பிசாசு சொல்லும் பொய்யை நம்பாதீர்கள். வாழ்க்கையை வானவில்லாய் பாருங்கள். தான் வாழ்க்கையில் முற்றிலும் தோல்வியுற்றவள் என்று என்னிடம் சொல்லி அழுவதற்கென்றே ஒரு பெண்மனி துாரப் பட்டணம் ஒன்றிலிருந்து வந்தார்கள். அவர்கள் கதையைக் கூறும்போது அவர்கள் செய்த பல அசத்தலான காரியங்களைக் கவனித்தேன். தன் கதையை முடித்து, கண்ணைத் துடைத்து, மூக்கை உறிஞ்சியபோது அவர்களது வெற்றிகளை ஒவ்வொன்றாகச் சுட்டிக்காட்டினேன். கண்ணீர் காய்ந்தது. முகம் ஜொலித்தது. "அப்படின்னா நான் தோல்வியடைந்தவள் என்று நீங்கள் நினைக்கவில்லையா?" என்று உதடுகள் துடிக்கக் கேட்டார்கள். "சே. இல்லவே இல்லை" என்றேன். புதுப் பெண்மணியாகத் திரும்பிச்சென்றார்கள்.

சிலுவையில் மரித்ததினால் இயேசு தோற்றுப்போனவரோ? உலகமனைத்திற்கும் இரட்சகரானாரே. மண்ணைக் கவ்வியதால் ஏவாள் தோற்றுப்போனவளோ? ஜீவனுள்ளோர் அனைவருக்கும் தாயானாளே. பாவத்தில் விழுந்ததினாலே தாவீது தோற்றுப்போனவரோ? அவர் அழுது அழுது பாடின பாட்டு அனைவரையும் அணைத்துக்கொள்ளுகிறதே. அற்புத சுகமளிக்கும் ஊழியன்

**எலிசா** நோய்வாய்பட்டு மரித்ததினால் தோல்வியடைந்தவரோ?(2இராஜ 13:14). அவரது எலும்புகளைத் தொட்ட மாத்திரத்தில் மரித்தவன் உயிர்பெற்றானெ. **மிரியாம்** தன்னுடைய பார்வையிலே தோல்வியுற்றவனாக விண்ணுலகம் சென்றிருக்கலாம். ஆனால் பல நூற்றாண்டுகளுக்குப்பிறகு தீர்க்கன் மீகா அவளை ஒரு தலைவியாகவேக் காண்கிறார். பெரும் வெற்றி வாகை சூடியவர் அருகில் நிற்கும்போது, உங்களைத் தோற்றவராகக் காணத்தோன்றும். உங்களை ஒருபோதும் யாரோடும் ஒப்பிடாதீர்கள். தேவனுக்கு நீங்கள் தனித்தன்மை வாய்ந்தவர். தேவன், உங்கள் மூலம் சாதிக்க வேண்டும்மென்பதை நீங்கள் சாதித்தால்போதும். நீங்கள் நீங்களாகவே இருங்கள். வேறொருவரைப்போலாக முயலாதீர்கள். **பொறாமை, கோழைத்தனம், தன்னம்பிக்கையின்மை,** இப்படி ஏதாவது உங்களில் ஒளிந்துக்கொண்டு பயன்றறவராக உங்களை உணரச் செய்கிறதா எனக் கண்டுபிடித்து அதை மேற்கொள்ளுங்ள். உறுதியும் ஊக்கமுமே உங்கள் தேவை.

எந்த சூழ்நிலையிலும் சாதகமானவை உண்டு. கண்டுபிடிக்கக் கடினமாயிருந்தாலும், அது அங்குதான் இருக்கிறது. இழப்பு ஒரு இனாமாகலாம். அந்த இழப்பு நீங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர ஒரு வாய்ப்பு,கற்றுக்கொள்வதற்கு சந்தர்ப்பங்களை எதிர்நோக்கியிருக்கும் மேன்மையான நபராயிருக்கவும்,மேன்மையான வீராங்கனையாயிருக்கவும் தோல்வி என்னைத் தூண்டிவிட்டிருக்கிறது. டென்னிசைப்போலவே வாழ்க்கையிலும் அப்படித்தான் முன்செல்லவேண்டும் என்றார். ஒருமுறை தோல்வியைத் தழுவினபின் டென்னிஸ் வீராங்கனை செரினா வில்லியம்ஸின் தோல்வி உலகின் முடிவல்ல. நமது குறைகளையே எண்ணி தியானித்துக்கொண்டிருப்பதே நமது தோல்வி. அதை விட்டு நமது பலங்களில் கவனம் செலுத்தி, நாம் சிறந்திலங்கும் காரியங்களை மேம்படுத்துவதில் கரிசனை காட்டவேண்டும். நம்மை நாமே இழிவுப்படுத்திக்கொள்வதே நம்மை நாசமாக்கிக்கொள்ள வழி. "ஒரு காரியம் உங்களுக்கு நடக்கவில்லையா? நடக்கச் செய்யுங்கள். வாழ்க்கை நடக்கும் என்று காத்திருக்கக்கூடாது. நீங்களே வாழ்க்கையை நோக்கி திறந்தக்கரங்களுடன் ஓடவேண்டும் என்றார் ஒருவர். உங்கள் எதிர்காலத்தின் பைலட் நீங்களே. ஆகவே **எழுந்திருங்கள்.** உங்கள் வாழ்வை **வெற்றியாய் மாற்றுங்கள். பிசாசின் பொய்களை நம்பவேண்டாம்.** இறைவனது **உண்மையை நம்பி** வாழுங்கள்.

**ஜாமக்காரன்:** இன்று கிறிஸ்தவ உலகில் அலட்சியப்படுத்தப்பட்டு ஒதுக்கப்பட்ட பெண்கள் ஏராளம். என் ஆலோசனை நேரங்களில் மிக அதிகமான பெண்கள் பிரச்சனை உள்ளவர்களாகத்தான் என்னிடம் வருகிறார்கள். அவர்களில் பலர் கணவன்மார்களால் தூக்கிவீசப்பட்டு விதவைகள்போல் வாழுகிறவர்கள் ஏராளம். இவர்களெல்லாம் ஒரு காலத்தில் கல்லூரியில், சபையில் ஜெபகூட்டம் நடத்தியவர்கள். ஆனால் விதவிதமான சூழ்நிலைகளினால் சோர்ந்துபோனவர்களாக இப்போது தனிஜெபம் இழந்து,வேதவாசிப்பு இழந்து, சொந்த வீட்டுக்குள்ளேயே தனிமைப்படுத்தப்பட்டு பகலில் அழமுடியாமல் இரவில் எல்லாரும் உறங்கியபின் கண்ணீர்விட்டு அழுது வாழ்கிறவர்கள். சகோதரி.லில்லியனின் இந்த செய்தி நிச்சயம் இதை வாசிக்கும் உங்கள் எல்லாருக்கும் புதுஉத்வேகத்தை அளிக்கும் என்பதில் சந்தேகமில்லை. கட்டுரையில் சிலது கரடுமுரடாக இருக்கும். ஆனால் கட்டுரையின் நோக்கம் மிக அற்புதம். இவர் எழுதிய புத்தகங்கள் உங்களுக்கு தேவையாயிருந்தால்,எழுதிய இந்த கட்டுரை விஷயத்தில் சந்தேகம் எழும்பினாலோ Dr.Lillyan அவர்களோடு தபால்வழியாக அல்லது இ-மெயில் வழியாக தொடர்பு கொள்ளலாம். கர்த்தர் டாக்டர்.லில்லியனுக்கு கொடுத்த தாலந்துகளுக்காக தேவனைத்துதிக்கிறேன். இவர் வாழ்க்கையின் அனுபவ எதிரொலி இவர் எழுதியதில் காணலாம். ஆனால் அது அனைத்து பெண்களுக்கும் நிச்சயம் பெலம்தந்து படுக்கையிலிருந்து உங்களை எழவைக்கும் என்பதில் சந்தேகமில்லை. இந்த கட்டுரையைக்குறித்த விமர்சனங்களை எனக்கு எழுதாமல் சகோதரிக்கு எழுதி பதில் பெறுங்கள். தொடர்புக்கு: **Dr.LillyanStanley,MBBS.,DCH., Blessing Youth Mission,Church Colony Gandhi Nagar,Vellore-632 006, E-Mail: hq@bymonline.org**

**குறிப்பு:** இது **கிறிஸ்தவர்களுக்காக மட்டும்** வெளியிடப்படுகிறது. வாசிக்கிற நீங்கள் மறுபடியும் பிறந்தவர்களானால் இதை கைபிரதியாக அச்சிட்டு கிறிஸ்தவர்களுக்கு மட்டும் விநியோகிக்கிலாம்.

# நீங்கள் மீண்டும் பிறக்கவேண்டும்

## (YE MUST BE BORN AGAIN)

**Selected**

நாம் **மீண்டும் பிறவாவிட்டால் மகிமையின் வாசல்** நமக்கு அடைக்கப்பட்டிருக்கும் என்று இயேசு சொல்கிறார். எனவேதான் நாங்கள் வினவுகிறோம். **நண்பரே, நீர் மீண்டும் பிறந்தீரா? சபை அங்கத்தினரே, நீர் மீண்டும் பிறந்தீரா**? இல்லையென்றால் நீர் இழந்துபோகப்பட்டவரே, ஏனெனில் இயேசுவே **"..... ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்ஜியத்தைக் காண மாட்டான்"** என்றார் யோவ 3:3. உண்மையாகவே யாரும் பாவியாக இறந்துப்போகவோ, அழிந்துப் போகவோ விரும்பமாட்டான். எனவே நம் கர்த்தரும் அதை விரும்பமாட்டார். துன்மார்க்கன் துன்மார்கத்தில் சாகிறது எனக்கு எவ்வளவேனும் பிரியமோ? அவன்தன் வழிகளைவிட்டுத்திரும்ப பிழைப்பது அல்லவோ எனக்கு பிரியம் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்கிறார். எசே 18:23,33:1. நீர் மறுபடியும் பிறக்கவேண்டும்.

**மீண்டும் பிறத்தல்** என்றால் என்ன? என்று நீங்கள் கேட்கலாம். முதலாவது இது என்ன அல்ல என்று பார்ப்போம். மீண்டும் பிறத்தல் என்பது **ஞானஸ்நானம் அல்ல** என்று புரிந்துக்கொள்ள வேண்டும். சிலர் இன்றும் ஞானஸ்நானம் பெற்றுவிட்டால் பரலோகம் போய்விடலாம் என்று தவறாக கருதுகிறார்கள். ஆனால் ஞானஸ்நானம் எடுத்தும் அவர்கள் **மறுபடியும் பிறக்கவில்லை.**(அப் 8:18-25) என்றால் நிச்சயம் பரலோகம் போகமுடியாது. மறுபடியும் **பிறந்த அனுபவம்இல்லாமல்** சபையில் அங்கத்தினராய் பலர் இருக்கிறார்கள். அவர்கள் யாரானாலும் உண்மை கிறிஸ்தவர்கள் கிடையாது. ஏனெனில் சிலர் ஞானஸ்நானம் என்ற பெயரில் மனந்திரும்பின அனுபவம்இல்லாமல் பக்கவழியாய் சபையில் அங்கத்தினானக இணைந்துவிடுகின்றனர்.(கலா 2:4). அப்படிப்பட்டவர்கள் எத்தனை வருட சபை அங்கத்தினானாக இருந்தாலும் கர்த்தருடைய பந்தியில் பங்குக்கொள்ளக்கூடாது. ஏனெனில் **சிலர் மனந்திரும்பாமல் அபாத்திரமாய் போஜனபானம்பண்ணி தங்களுக்கு தாங்களே ஆக்கினைத் தீர்ப்பை வருவித்துக்கொண்டார்கள்.**(1கொரி 11:29,30). **மனந்திரும்புதல் என்பது சீர்திருத்தலோ,நல்லவனாக வாழமுயற்சிப்பதோ அல்ல...."** இப்படிப்பட்ட நிலையில் அநேகர் பரலோகத்தில் உட்பிரவேசிக்க வகை தேடினாலும் அவர்களால் கூடாமற்போகும்...."லூக் 13:24. சிலர் மனந்திரும்புதல் அனுபவம்இல்லாமல் மணிக்கணக்காக ஜெபிப்பார்கள். ஜெப கூட்டங்களையும் நடத்துவார்கள். **அந்த ஜெபம் கேட்கப்படாது.** ஏனெனில் இயேசு சொல்கிறார். இந்த **ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து தங்கள்** உதடுகளினால் **என்னைக்கனம் பண்ணுகிறார்கள்.** அவர்கள் இருதயமோ எனக்கு துாரமாய் விலகியிருக்கிறது".மத் 15:8.

மேலும் சிலர் சொல்லலாம் **"என்னால் முடிந்த யாவற்றையும் செய்ய முயல்வேன் ஏழைகளுக்கு ஈந்து நோயாளிகளைச்சந்தித்து என்னால்முடிந்த எல்லா நன்மைகளையும் ஒவ்வொருநாளும் செய்தால் அது மனம்திரும்புதல் ஆகாதா?ஆகாது!. அது சன்மார்க்க ஜீவியம் ஆகும். அவர்களால் நான் உண்மையாகவே மீண்டும் பிறந்தவன்"** என்று எந்த அனுபவத்தையும்

அவர்கள் வாயினால் குறிப்பிடமுடியாது. நாம் உண்மையாகவே வேறொருவராக மாறமுடியாது. "எப்படி யென்றால் மாம்சசிந்தை தேவனுக்கு **விராதமான பகை.** அது தேவனுடைய நியாய பிரமாணத்துக்கு கீழ்ப்படியாமலும்,கீழ்ப்படியக்கூடாமலும் இருக்கிறது"(ரோம 8:7). நமக்கு ஒரு **இருதயமாற்றம் வேண்டும்.** தீர்க்கதரிசியின்மூலம் தேவன் அதைப்பற்றி சொல்கிறார். **"உங்களுக்கு நலமான இருதயத்தைகொடுத்து,உங்கள் உள்ளத்தில் புதிதானஆவியைக் கட்டளையிட்டு கல்லான இருதயத்தை** உங்கள் மாம்சத்திலிருந்து எடுத்துப்போட்டு,**சதையான இருதயத்தை உங்களுக்குக் கொடுப்பேன்"**எசே 36:26 என்று கர்த்தர் சொல்லுகிறார். சரி,அப்படியானால் **புதுப்பிறப்பு** என்பதுதான் என்ன?என்று நாம் வினவலாம்?ஏன்அதை **பிறப்பு**என்னும் சொல்கொண்டு அழைக்கிறோம்?.

அந்த பிறப்பை எப்படி?எப்போது? அடைகிறோம்! **"மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும்....** "என்று இயேசு சொல்கிறார்.யோ 3:6. ஒரு **குழந்தை பிறக்கிறது** என்றால் இதுவரை இல்லாத ஒன்று புதிதாக பிறக்கிறது என்று அறிகிறோம். அதாவது ஒரு **புது வாழ்வு** ஆரம்பிக்கிறது. ஒரு புதுஆள். ஆனால் மாம்ச பிரகாரமானவன். அது போன்றே நாம் **மறுபடியும்** பிறக்கும்போது, கிறிஸ்து இயேசுவில் ஆவியில் ஒரு புது வாழ்வு ஆரம்பிக்கின்றது. இந்த அனுபவம் இதற்கு முன்புஇராததும் அனுபவிக்காததுமாகும். இந்த வகையை ஒப்புநோக்கும்போது, இது மனிதனுக்கு மட்டும் இயற்கையான பிறப்பு போன்றிருப்பதால்தான் இது **பிறப்பு** என்று கூறப்படுகின்றனது. இது கிறிஸ்துஇயேசுவில் நித்தியமான ஒரு புதுவாழ்வு,ஏனெனில் **உயிரோடிருந்து** விசுவாசிக்கிற வனெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான்"யோ 11:26. இங்கு **மரிக்காமல்** இருப்பது என்பது ஆத்தும மரணத்தைக்குறிக்கிறது. செத்துபோய்விட்டால் எதையும் விசுவாசிக்க முடியாது. **மனந்திரும்பவும்** முடியாது. "இவைகள் எப்படி ஆகும்?" என்று நிக்கொதேமுவுடன் நாமும் விளித்து வினவுகிறோம்மல்லவா? யோ 3:9.

' **மனிதனால் அது கூடாததுதான் ஆனால் தேவனால் எல்லாம் கூடும்** என்று இயேசு தெளிவுப்படுத்தியதை நாம் ஒப்புக்கொள்ளத்தான்வேண்டும். உண்மை சந்தோஷத்தை இழந்த நிலையில் பாரத்தோடு இழிய பாவியாக, மாம்ச இச்சைகள் நிறைந்து இருதய சமாதானமில்லாமல், இருக்கிறேன் என்று நம் பாவத்தை ஒத்துக்கொண்டு இப்படிப்பட்ட நமது துயரத்தில் **"இரட்சிக்கப்டுவதற்கு நான் என்ன செய்யவேண்டும்"**என்று அந்த சிறைச்சாலைக்காரன் கேட்டபோல் நாமும் கர்த்தரிடம் கேட்டால் அப்போது பேதுரு கூறியதுபோல் **கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி** என்ற பதிலை பெற்றுக்கொள்வோம். இந்த குறிப்பிட்ட மனிதன் தனது வாழ்க்கையின் கடைசி எல்லையில் இருந்தான் என்பதையும் **நான் எதையும் செய்யத் தயார்** என்று அவன் கூறுவதுபோல் தோன்றுகிறது. இதுதான் கர்த்தரிடம் முழுமையாக சரண் அடைவது என்பதாகும். இருதயத்தை காண்கின்ற தேவன் கூறுகிறார். அதாவது, நீங்கள் என்னை நோக்கி ஆண்டவரே!ஆண்டவரே! என்று அழைத்தாலும் கர்த்தர் சொல்வதைச் செய்ய கீழ்ப்படிந்தவராக இருக்கவேண்டும். முழுவதும் அவர் வார்த்தைக்கு கீழ்ப்படிந்து அவருக்காக வாழ்வீர்களா! இல்லையா! என்பதையும் அவர் அறிகிறார். அப்படி நாம் வாழ எதிர்ப்பார்க்கிறார். அப்போதுதான் தேவன் பரிசுத்தஆவியின்(சங் 51:10) வல்லமையோடு உம்மிடம் வந்து உம்மிலே சரியான ஆவியின் நிலையை உம் உள்ளத்தில் கொண்டுவருவார். இவ்வாறாக நீர் கிறிஸ்துஇயேசுவில் அவரை(இயேசுகிறிஸ்துவை)விசுவாசிப்பதின்மூலம் **மறுபடியும் ஒரு புது சிருஷ்டியாக பிறக்கிறீர்.** (2 கொரி 5:7).

இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்கள்" என்று வேதம் வசனம் கூறுகிறது(எபி 3:7). அதாவது எந்த வயதிலும்,எந்த நேரத்திலும்,எந்த இடத்திலும் கடவுளின் அழைப்பு வருவதை நாம் கேட்போம் என்பதே அதன் பொருள். அந்த கர்த்தரின் வார்த்தைக்கு கீழ்ப்படிந்தால்போதும் தேவனுடைய பிள்ளைகளும்,தேவனுடைய சுதந்தரருமாக,கிறிஸ்துவுடனே உடன்சுதந்திரமாக நாம் வாழ்ந்து ஆவியின் மூலம் **மறுபடியும் பிறந்தவர்களாக மாறுவோம்.**(ரோம 8:14-17).

ஆனால் அந்த மறுபிறப்பின் அனுபவத்துக்கு எவ்வளவு நாளாகும். புதுப் பிறப்பிற்குபிறகு நான் வளர வேண்டாமா?.நாம் இயேசுவினிடம் கிருபைக்காகவும்,மன்னிப்புக்காகவும் வரும்போது அந்த கணத்திலேயே நீங்கள் கேட்டவைகளை யாவும் **மறுபடியும் பிறந்த அனுபவமும்** உடனே கிடைத்து விடுகிறது. ' கடைசியாக நான் மறுபடியும் பிறந்ததை எங்ஙனம் அறிவேன்?. என்ற கேள்விக்கு "நீங்கள் விசுவாசமுள்ளவர்களோவென்று உங்களை நீங்களே சோதித்து அறியுங்கள். உங்களை நீங்களே பரீட்சித்துப்பாருங்கள் என்று வேதம் கூறுகிறது. இயேசுகிறிஸ்து உங்களுக்குள் இருக்கிறரென்று உங்களை நீங்களே அறியீர்களா? நீங்கள் பரீட்சைக்கு நில்லாதவர்களாயிருந்தால் அறியீர்கள்" என்று பவுல் 2 கொரிந்தியர் 13:5ல் போதிக்கிறார்.

' எனவே மறுபடியும் **பிறவாத அனுபவமுள்ளவர்களை** பிசாசு பரீட்சிக்கும்போது அவர்கள் பாவத்தில் **செத்து இழந்துப்போனவர்களாக, நியாயந்தீர்க்கப்பட்டவர்களாக, தீய மனச்சான்று** உடையவர்களாக, மாம்ச நோக்குடையவர்களாக,நம்பிக்கைஇழந்தவர்களாக,கீழ்ப்படியாதவர்களாக இந்த உலகில் தேவனில்லாதவர்களாக பழையப்பாவத்தை திரும்பதிரும்ப செய்பவர்களாக, சாத்தானின் பிள்ளைகளாகவே இருப்பார்கள் என்று திருமறை போதிக்கின்றது.

' மாறாக, மறுபடியும் பிறந்த **கிறிஸ்தவன் தேவனின் பிள்ளையாக மாறுகிறான்.** அவன் கிறிஸ்துவில் உயிருள்ளவன்,இரட்சிக்கப்பட்டவன்,தண்டனைக்கு தப்பினவனாக,நல்ல மனச்சான்று முள்ளவன்,பரிசுத்தஆவியினால் நிறைந்தவனாக,ஆவிக்குரிய நோக்கமுள்ளவனாக,விசுவாசமும் நித்திய வாழ்வைப்பற்றிய நம்பிக்கையுள்ளவனாக அறியப்படுகிறான். அப்படிப்பட்ட அவர்களுடைய பாவங்கள் அழிக்கப்பட்டு, அவர்கள் இயேசுவின் இரத்தத்தினால் சுத்திரிக்கப்பட்டவர்கள் ஆவார்கள். அவர்கள் மனிதபுத்திக்கெட்டாத சமாதானமும்,அன்பும் நிறைந்தவர்கள் ஆவார்கள். அப்படிப்பட்டவர் களுக்கு மனதில் குற்றஉணர்வு இருக்காது. அவர்கள் கர்த்தருடைய சித்தத்தை ஆசித்து, விரும்பி அதைச் செய்ய சக்தியும் உள்ளவார்களாக இருப்பார்கள். அவர்கள் மரணத்துக்கு பின்பும் ஒரு நம்பிக்கையை உடையவர்களாக இருப்பார்கள்". நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து, உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்" யோவான் 14:3 என்ற வாக்குத்தத்தைப் இவர்கள் அப்படியே நம்புவார்கள். ஆகையினால் இத்தகைய மாற்றத்தை நாம் நம் வாழ்க்கையில் பெறும்போது நாம் **மறுபடியும் பிறந்துள்ளளோம்** என்பதை அறியாமல் இருக்கமுடியுமா? நிச்சயம் நீங்கள் அதை அறியாமல் உங்களில் உணராமல் இருக்கமுடியாது. ஏனெனில் நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறேமென்று ஆவியானவர் தாமே நம்முடைய ஆவியுடனே கூடச் சாட்சி கொடுக்கிறார்" ரோம 8:19. இந்த உன்னதஅனுபவத்தையும் ஆத்துமாவில் இவ்வாழ்க்கையையும், நீங்கள் அனுபவத்திராவிட்டால் ஏனோ தானோவென்று இருக்கவேண்டாம். ஏனெனில் அப்படி இந்த உன்னத அனுபவத்தை அனுபவிக்க நீங்கள் ஆசைபடவிட்டாலும் நீங்கள் தேவனையும் உங்கள் ஆத்துமாவையும் அலட்சியப்படுத்துகிறீர்கள் என்று கருதப்படுவீர்கள். நீர் மீண்டும் பிறக்கவேண்டும்!. சீக்கிரம்!.

**' நீங்கள் மறுபடியும் பிறவாவிட்டால் மரித்தபின் பரலோகம் போகமுடியாது. யோ 3:3.**

**' சபையில் ஒருவர் அங்கத்தினானாகவேண்டுமானாலும் மறுபடியும் பிறந்த அனுபவம் இருந்தால்தான் உண்மையான அங்கத்தினன் என்று அழைக்கப்படுவீர்கள். அந்த மறுபடியும் பிறந்த அனுபவம் உள்ளவர்களுக்கு சாவுபயம் இருக்காது. தோல்வியில், நிறாசையில் வியாதியில் சோர்ந்துபோகமாட்டார்கள்.**

**அன்பானவர்களே, இந்த மறுபடியும் பிறந்த அனுபவத்தை உயிரோடு இருக்கும்போதே இதை வாசிக்கிற நீங்கள் பெற்றுக்கொள்ளுங்கள். மரித்தபின் யாரும் இந்த நல்ல அனுபவத்தை பெறவேமுடியாது. மனிதனுக்காக கர்த்தர் ஒரே ஒரு வாழ்க்கையைத்தான் அனுமதித்துள்ளார். அந்த ஒரு வாழ்க்கையில் மறுபடியும் பிறந்த அனுபவத்தை பெற்றுக்கொள்வது மிக முக்கியம். கர்த்தர்தாமே இந்த அனுபவத்தை பெற உங்களுக்கு உதவுவாராக.**

# ஆவிக்குரியவர்களின் அடையாளங்கள் என்ன?

**Selected**

இன்றைய நாட்களில் அநேகர் தாங்கள் **ஆவிக்குரியவர்கள்** என்றும், உண்மையான **கிறிஸ்தவர்கள்** என்றும் காட்டிகொண்டும், வெளிப்பிரகாரமாக ஆடை அணிவதிலும், குறிப்பிட்ட சபைக்கு செல்வதில் தாங்கள் பெருமை பாராட்டிக்கொள்வதிலும், ஆழ்ந்த சத்தியங்களை கேட்பதினால் தாங்கள் மற்றவர்களைவிட **சிறந்தவர்கள்** என்றும் சொல்லிக்கொள்வதிலும், நேரத்தை வீண் அடிப்பார்கள். ஆனால் உண்மையில் யாரை வேதம் **ஆவிக்குரியவர்கள்** என்றும், **கிறிஸ்தவர்கள்** என்றும் அங்கீகரிக்கிறது என்று ஆராய்ந்து பார்ப்போம். பல ஆண்டுகள் சபைக்கு சென்று கூட்டங்களுக்கு சென்று சத்தியங்களை ஏன் கேட்கிறோம் என்று தெரியாமல் ஓடிக்கொண்டிருப்பார்கள்.

**"ஆவிக்குரியவர்கள்"** என்றால் கிரேக்க வார்த்தை **"நிமோடிக்கோஸ்"**(GK:pneumatikos) **"தேவனுடைய ஆவியின் ஆளுகையில் இருப்பவன்".**

அடையாளங்கள்:

## 1. எல்லாவற்றையும் நிதானித்து அறிவான்- 1 கொரி 2:15.

"நிதானித்து" கிரேக்க வார்த்தை அனாக்ரிநோ - Gk:anakrino: **1). ஜாக்கிரதையாய் சோதனை செய்பவன், 2.தனக்குதானே கேள்விகேட்பவன், 3. மதிப்பீடு செய்பவன், 4.குறை சொல்பவனை சோதனை செய்பவன், 5.சரியான தீர்மானங்களை எடுப்பவன், 6.உணர்ச்சி வசப்படாதவன், 7.நியாயத்தின் பக்கம் நிற்பவன்.** இந்த அர்த்தங்கள் ஒவ்வொன்றும் ஒரு செய்தி என்பது உங்களுக்கே தெரியும். இன்றைய நாட்களில் அநேக **கிறிஸ்தவர்கள்** தாங்கள் பிடித்த முயலுக்கு **மூன்றுகால்** என்ற நிலையில் தாங்கள் விவாதத்தில் ஜெயிக்கவேண்டும் என்று இருக்கிறார்களே தவிர, மேற்சொன்னதுபோல் நிதனிப்பது இல்லை. நீங்கள் **ஆவிக்குரியவர்கள்** என்பதை இதில் காட்டுங்கள். நிதானித்து முடிவெடுங்கள்.

## 2. பெலவானாய் இருப்பான்.- அப் 1:18, 1கொரி 4:20,1கொரி 3:2, ஏசாயா 2:3.

"பெலன்" கிரேக்க வார்த்தை: டுனாமீஸ், 1.சாத்தான் மேற்க்கொள்ளக்கூடிய பெலன், 2 பாவத்தை மேற்க்கொள்ளக்கூடிய பெலன், 3. சகித்துகொள்ளக்கூடிய பெலன், ஆவிக்குரியவர்கள் என்று கூறுவார்கள். தாங்கள் மற்றவர்களைவிட சத்தியத்தை சரியாய் கடைபிடிக்கின்றோம் என்று காட்டிக்கொள்வார்கள். மிகுந்த பரிசுத்தவான்கள்போல் பேசுவார்கள். ஆனால் யாராவது கொஞ்சம் சீண்டினால் மண்டையை உடைத்துவிடுவார்கள். அவர்களைப்போல கெட்ட வார்த்தை யாரும் பேச முடியாது. யானையைப்போல பிளிறுவார்கள். ஆனால் அவர்களுக்கு சகித்துக்கொள்ளக்கூடிய பெலன் இருக்காது. அதிகாலையிலோ, மற்ற நேரங்களிலோ,ஜெபிக்கமாட்டார்கள். நாம் ஆவிக்குரியவர்கள் என்று சகித்து கொள்வதில் காட்டவேண்டும்.

## 3. யார் சொன்னாலும் சொல்லாவிட்டாலும் சுவிசேஷ ஊழியத்தை செய்வான். 1கொரி 9:16.

ஆவிக்குரியவன் சுவிசேஷ ஊழியத்தை மிக இலகுவாக எண்ணமாட்டான். இதற்கு தான் தேவன் நம்மை அழைத்திருக்கிறார். வீடு,பணம், மோட்டார் சைக்கிள், கார்,கோழிகறி பிரியாணி, சாப்பாடு,ஆடைகள்,சுகமான படுக்கைகள் எல்லாம் நாம் எப்படியவாது ஒரு மனிதனுக்கு சுவிசேஷம் அறிவித்து பரலோகம் கொண்டு வரவேண்டும் என்பதற்காகவே தேவன் நமக்கு கொடுக்கின்றார்.

வாழ்க்கையில் இவ்வளவு பிரசங்கங்கள் கேட்டு, பல ஆண்டுகள் சபைக்கு சென்று, கூட்டங்களுக்கு சென்று, ஒருவன்கூட உங்கள்மூலம் **மனந்திரும்பவில்லையென்றால்** நீங்கள் ஆவிக்குரியவர்கள், கிறிஸ்தவர்கள், **கர்த்தர் எங்களோடு இருக்கிறார்** என்று சொல்லிக்கொள்வது அர்த்தமற்றது. ஆழமாய் யோசித்துப்பாருங்கள். இத்தனை காரியங்களின் விளைவுகள் என்ன?

## 4. சாட்சியாக வாழ்வான் அப் 1:8.

இந்த வசனத்தில் வருகிற **சாட்சி** என்ற வார்த்தை சபையில் தலைவலித்தது ஜெபித்தேன் சுகமானது என்று ஞாயிற்றுக்கிழமை வழக்கமாக சொல்லுகின்ற சாட்சி அல்ல.

கிரேக்க வார்த்தை: **"மார்ட்டியோ"** GK:Marts of martio: அதாவது **1.இரத்தசாட்சியாக வாழ்வது, 2.இரத்த சாட்சியாக மரிப்பது.**

**மரிப்பதைவிட** இரத்தசாட்சியாக **வாழ்வது** கடினம். பவுல் கூறுகின்றார். நான் அனுதினமும் சாகிறேன். **ஆவிக்குரியவன்** எந்த சூழ்நிலையிலும் சாட்சியை இழந்துப்போகமாட்டான். தன்னுடைய வாழ்க்கையில் எல்லா உபத்திரவங்களையும் தாங்கி கிறிஸ்துவை வெளிப்படுத்துவான். இன்றைக்கு ஊழியம் அநேகருக்கு வயிற்று பிழைப்பாகிவிட்டாதினாலும், தேவனுடைய மன்னிப்பை எளிமையாக எடுத்து கொள்வதினாலும், சாட்சியில்லாத வாழ்க்கை அவர்களை மட்டுமல்ல, சாட்சியோடு வாழ்கிற மற்றவர்களையும் ஜனங்கள் தவறாக புரிந்துக்கொள்ள ஏதுவாகிறது.

❖ **ஆவிக்குரியவன்** என்றால் அவனுடைய சாட்சிதான் அவனை **ஆவிக்குரியவன்** என்று காட்டும். சாட்சியில்லாவிட்டால் 1000 ஆழமான பிரசங்கம் செய்தாலும் தேவன் கிரியை செய்யமாட்டார் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

## 5. தனக்கு தேவன்(கர்த்தர்) கொடுத்த தோட்டமாகிய சபையில் இருப்பான்.(மத் 20:1)

**தோட்டம்** என்றால் **சபை** என்று அர்த்தம் இது நமக்கு தெரிந்த ஒன்றுதான். **நாபோத்துக்கு ஒரு தோட்டம் இருந்தது.** 1ராஜ 21:1. **சாலமோனுக்கு ஒரு தோட்டம்.** உன் 8:11, **நேசருக்கு தோட்டம்** ஏசா 5:1. **இயேசுவுக்கு ஒரு தோட்டம் இருந்தது.** யோ 18:1. அதேபோல் ஒவ்வொரு விசுவாசிகளுக்கும் ஒரு தோட்டம் உண்டு. அதை ஜெபித்து தேர்வு செய்யவேண்டும். அநேகர் சொல்வார்கள் அதுவும் சபைதானே அங்கும் **பைபிளைத்தானே** போதிக்கின்றார்கள். அங்கும் இயேசுவைத்தானே கும்பிடுகிறார்கள்.

ஆகவே ஒவ்வொரு சபையாக சென்று **மார்க்கம் தப்பி** அலைகிற நட்சத்திரம் என்று **யூதா** கூறுவதுபோல அலைந்து பிறகு எந்த சபையும் சரியில்லை என்று அவர்கள் ஒரு சபையை தேவன் சொல்லாமலே ஆரம்பிப்பார்கள். 100 சதவீதம் நல்ல சபை எதிர்ப்பார்ப்பவர்கள் உடனடியாக பரலோகம் செல்லலாம். ஆனால் 75 சதவீதம் நல்ல சபை எங்கு இருக்கிறது என்று தேடி கண்டுபிடியுங்கள்.

**நாம்** சபையை மாற்றுவது அல்ல. சபை **நம்மை** மாற்றுவதுதான் விஷயம். சபை மாறிபோக வேண்டுமென்றால் சில காரியத்திற்காக

1. **பெண்கள் விஷயத்தில்(பாஸ்டர்கள்) ஊழியன்** பாவத்தில் வீழ்ந்துவிட்டால்,
2. **ஒரு பாஸ்டர் அளவுக்கு மீறி தன் குடும்பத்திற்கு சொத்துசேர்க்க ஆரம்பித்தால்,**
3. **பாஸ்டர் தவறான உபதேசத்தை போதித்தால்,** மற்றபடி சிறிய சிறிய விஷயத்திற்குகெல்லாம் அல்லது **சின்ன பிரச்சனைக்கெல்லாம்** சபையை மாற்றுவது சரியல்ல.

ஆகவே **ஆவிக்குரியவன்** கர்த்தர் தன் வேலைக்கு அமர்த்தின(தோட்டத்தில்) **சபையில்** இருந்து வேலை செய்து கூலியை பெற்றுக்கொள்வான். விசுவாசிகளாகிய நாம் யாவருக்கும் ஒருநாள் எல்லோரும் ஓரிடத்தில் **ஒரே மேய்ப்பன் இயேசுவின்** கீழ் இருக்கபோகிறோம் என்பதை நாம் மறந்துவிட வேண்டாம்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

# குவைத் (KUWAIT) தமிழ் சபை கன்வென்ஷன்






**சவூதி அரேபியா நாட்டில்உள்ள குவைத்** என்ற நாட்டில் உள்ள தமிழ் CSI ஆலயத்தில் நடந்த கூட்டங்கள் மிகுந்த ஆசீர்வாதமாக அமைந்தன. **Rev.நோபில் கெம்பீரம்** எல்லா கூட்டங்களிலும் தலைமை தாங்கி நடத்தினார். **திரு.ஜான்சன்** சபை செயலர் கூட்ட ஏற்பாடுகளை மிகுந்த ஜெப ஆயத்தத்துடன் செய்தார். கூட்டங்கள் எப்போதும் இல்லாதஅளவு மிகவும் ஆசீர்வாதமாக அமைந்தது. கர்த்தருடைய நாமம் மகிமைப்பட்டது. வெள்ளிகிழமை CSI மலையாள காங்கிரிகேஷனிலும் செய்தியளித்தேன்.

# கோயமுத்தூர் CSI DIOCESE
# CSI CHRIST CHURCH கன்வென்ஷன்







**கோவை திருச்சி ரோட்டில் அமைந்த** CSI Christ Church **கூட்டங்கள் அனைத்தும் இம்முறையும் மிகச் சிறப்பாக அமைந்தன. சனிக்கிழமை தனி ஆலோசனைக்கென்று ஏராளமானவர்கள் வந்து ஆலோசனை பெற்று ஜெபித்து சென்றனர். ஜாமக்காரன் வாசக குடும்பங்களையும் இம்முறை சந்திக்க நல்ல வாய்ப்பு கிடைத்தது.** Rev. **எபினேசர்மணி அவர்கள் மிகச் சுறுசுறுப்பாக ஒவ்வொரு நாளும் கூட்ட ஏற்பாடுகளை கவனித்தது புகழப்படவேண்டியது. இக்கூட்டம் ஆசீர்வாதமாக அமைந்தது. கர்த்தருக்கு மகிமை உண்டாவதாக.**

# திருநெல்வேலி CSI திருமண்டலத்தில் உள்ள விக்கிரமசிங்கபுரம் கன்வென்ஷன்








**விக்கிரமசிங்கபுரம் CSI கன்வென்ஷன் மிக சிறப்பாக நடந்தது. Rev.அருள்ராஜ் அவர்கள் கூட்டத்தை ஒவ்வொரு நாளும் ஜெபத்துடன் ஆரம்பித்து வைத்தார். கூட்ட ஏற்பாடுகளை திரு.சொர்ணம்**(Suprintendent of Post Offices) **அவர்களுடன் மற்ற விசுவாசிகளும் இணைந்து இக்கூட்ட ஏற்பாடுகளை ஜெபஆயத்தத்துடன் செய்ததால் கூட்டங்கள் யாவும் மிகவும் ஆசீர்வாதமாக அமைந்தது. கர்த்தருக்கு மகிமை உண்டாவதாக.**

# திருச்சி-தஞ்சை CSI திருமண்டலத்தில் உள்ள கூத்தம்பூண்டி கன்வென்ஷன்






ஒட்டன்சத்திரம் அருகே கூத்தம்பூண்டி என்ற சிறு கிராமத்தில் நடந்த 3 நாள் கூட்டங்கள் கிராம மக்களுக்கு பெருத்த ஆசீர்வாதத்தை இயேசுகிறிஸ்துவின் வசனம்மூலம் கிடைக்கப்பெற்றது. இரண்டு வருடங்களுக்கு முன்பே இக்கூட்டங்களுக்கு தேதி கொடுத்திருந்தேன். கிராம மக்கள் அனைவரும் பல நாட்களாக மிக சிரமப்பட்டு இக்கூட்ட ஏற்பாடுகளை மிக உற்சாகமாக ஏற்பாடு செய்திருந்தனர். ஒட்டன்சத்திரம் CF(Christian Fellowship) ஆஸ்பத்திரியிலிருந்தும் விசுவாசிகளும், டாக்டர்களும் 3 நாட்களும் பங்கெடுத்தனர். கூத்தம்பூண்டி CSI ஆலயம் Rev.எல்லீஸ் என்ற மிஷனரிமூலமாக 90 வருடங்களுக்குமுன் கட்டப்பட்ட சிறு ஆலயம் ஆகும். சுற்றுவட்டராத்தில் 9 கிராம மக்களும் இக்கூட்டங்களில் பங்குகொண்டு ஆசீர்வாதம் பெற்றனர். பெரிய பட்டிணங்களில் நான் பிரசிங்கித்தபோது கிடைக்காத மனதிருப்தியும், சந்தோஷமும் கூத்தம்பூண்டி கிராமகூட்டங்களில் கிடைத்தது. சகோ.ஐயாதுரை அவர்களுடன் அச்சபையிலுள்ள மற்ற விசுவாசிகள் ஒருங்கிணைந்து இக்கூட்டங்களை மிகச்சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர். ஞாயிறு காலை (தாராபுரம்) எல்லீஸ் நகர் CSI ஆலயத்தில் காலை ஆராதனையில் பங்கெடுத்தேன். டிஸ்ட்ரிக்ட் சர்ச் கவுன்சில் சேர்மேன் Rev. நளினி இம்மானுவேல் அவர்கள் எனக்கு சால்வை அணிவித்து என்னை கவுரவிக்க ஏற்பாடு செய்திருந்தார்கள். Rt.Rev.ஜெயசீலன்(TELC Rtd Bishop) அவர்களும், அவர் துணைவியாரும் ஆராதனையில் உலக பெண்கள் தின சிறப்பு செய்தி அளித்தனர். கர்த்தருக்கு மகிமை உண்டாவதாக.

# கிறிஸ்தவர்களுக்கு சட்ட உதவி:

இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் **கிறிஸ்தவ சபைகள்** தாக்கப்படுகின்றன. **சபை ஊழியர்கள், மிஷனரிகள்** தாக்கப்படுகிறார்கள். அதுமட்டுமல்ல, **மதம்மாற்றம் செய்ய முயன்றார்கள்** என்று கூறி எந்தவித ஆதாரமுமில்லாமல் பாஸ்டர்களையும், விவாசிகளையும் போலீஸ்லாக்கப்பிலும், சிலர் ஜெயிலிலும் அடைக்கப்படுகிறார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு உதவ ஆவிக்குரிய வக்கீல் தொழில் செய்யும் கர்த்தருடைய பிள்ளைகள் இந்தியா முழுவதும் ஒன்றாக இணைந்து **UNITED CHRISTIAN FORUM** என்ற பெயரில் **உதவி இணைப்பு** Help Line தொடங்கியுள்ளார்கள்.

உதவி தேவைப்படுவோர் இங்கு குறிப்பிடும் **1800 2084 545** என்ற எண்களில் தொடர்புக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட வக்கீல்களுக்காக தேவனை துதிப்போம். இவர்களுக்காக தினமும் ஜெபிப்போம்.

**APRIL 2015**

# Printed Book/Book Post

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.